பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 27 புதன்கிழமை (10.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 196

# 20 நாடுகளின் உதவியுடனேயே புலிகளை அரசு தோற்கடித்தது

## அதற்காக நன்றி கூறுகிறார் அமைச்சர் போகொல்லாகம



கொழும்பு, ஜூன் 10

இருபது நாடுகளின் உதவியுடனேயே விடுதலைப் புலிகளை இலங்கை அரசு தோற்கடித்தது என்று நாடாளுமன்றத்தில் தகவல் தெரிவித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவிய அந்த 20 நாடுகளும் எவை என்று குறிப்பிட்டுக் கூறாத அமைச்சர், அந்த நாடுகள் அனைத்துக்கும் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மேயர் ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சிக்கு

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாநகர முதல்வர் (மேயர்) சிவகீதா பிரபாகரன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையப்போவதாக அறிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் கூட்டம் நேற்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்ட போதே அவர் தமது இந்த (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் டில்லியில் சிவ்சங்கர் மேனனுடன் பேச்சு

## இன்று நாராயணனுடன், நாளை வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு

-டில்லியிலிருந்து என்.வித்தியாதரன், என்.பத்மசீலன்-

கொழும்பு, ஜூன் 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று டில்லியில் இந்திய வெளியுறவுச் செயலர் சிவ் சங் கர் மேனனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.15 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனை இன்று டில்லியில் சந்திக்கும் தமிழ்க் கூட்டமைப்பினர், நாளைய தினம் புதிய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு இளைஞர் கொழும்பில் கைது

கொழும்பு, ஜூன் 10

வெளிநாட்டில் இருந்துவந்து கொழும்பு வெள்ளவத்தையில் தங்கியிருந்த இருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 ஆவது வீதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த இவர்கள் இருவரும் பாது காப்பு அமைச்சின் உத்தரவுக்கு அமைவாக கடந்த சனிக்கிழமை கைது செய்யப் பட்டனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசு துணிச்சலுடன் செயற்பட்டு இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கோருகிறார் இந்தியப் பிரதமர்



புதுடில்லி, ஜூன்10

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான துணிச்சலை வெளிப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் மன்மோகன் சிங் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் மக்களுடன் எமக்கு பல நூற்றாண்டு கால உறவுகள் இருக்கின்றன. அங்குள்ள தமிழ் மக்களின் நலன் குறித்து எமக்கு ஆழமான மாற்று பிணைப்புடனான ஆர்வங்கள் இருக்கின்றன. தமிழர் பிரச்சினை என்பது விடுதலைப் புலிகளை விட பெரியதாகும். இலங்கை மக்கள் சம உரிமை பெற்ற குடிகளாக, கௌரவத்துடன் வாழ்வதற்கு அவர்களது அபிலாஷைகளை தீர்த்து வைக்க புதிய சிந்தனைகளை துணிச்சலையும் காண்பிக்கும் என்று நான் மிகவும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்.

மோதல் காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் புனர்வாழ்வுக்கு உதவும் விடயத்தில் இந்தியா தனது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியா இதற்காக 500 கோடி ரூபாவை வழங்கியுள்ளதுடன் அந்த மக்கள் தமது பகுதிகளுக்குத் திரும்புவதற்கு மேலும் உதவத் தயாராகவுள்ளது -என்றார்.

**உள்ளே**

ஆசிரியர் - பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

**நாளை**

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் விளாத்தாள்

# எம்மீது யுத்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் எந்தச் சக்திக்கும் நாம் ஒருபோதும் அஞ்சோம்!

## நாடாளுமன்றில் பிரதமர் ரட்னசிறி இறுமாப்பு



கொழும்பு, ஜூன் 10

யுத்தக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, இலங்கையை சர்வதேச பலிபீடத்தின் முன் நிறுத்த சில சக்திகள் முயற்சி செய்து வருகின்றன என்று அரசு சார்பில் நேற்று நாடாளுமன்றத்தில்தெரிவிக்கப்பட்டது.

யார் என்ன செய்தாலும்-என்ன சொன்னாலும் ஆங்காங்கே எஞ்சியுள்ள பயங்கரவாதத்தின் நிழல்கள் முற்றாக அழித்தொழிக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்கவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஒரு மனிதனின் மரணத்தைக் கண்டு மகிழ்ச்சியடையும்மக்கள் இந்த நாட்டில் இல்லை. ஆனால், பயங்கரவாதிகளின் தலைவரின் மரணத்தைக் கண்டு இந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

30 வருடங்களாக இந்த நாட்டைப் பிடித்து ஆட்டிய பயங்கரவாதமும் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது. இந்தப் பயங்கரவாதம் எல்லோருக்கும் தலையிடியாக இருந்தது. இதற்கு சர்வதேச ஒத்துழைப்புக் கிடைத்திருந்தது. (16 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா இராணுவத் தளத்தின் ஆயுதக் களஞ்சியத்தில் தீ விபத்து!

## வெடிச்சத்தங்களால் மக்கள் பதற்றம்

கொழும்பு, ஜூன் 10

வவுனியாவில் அமைந்துள்ள வன்னி இராணுவத் தலைமையக ஆயுதக்கிடங்கில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா இராணுவத் தலைமையக ஆயுதக் கிடங்கில் நேற்று மாலை 5.40 மணியளவில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றது என்றும் இத் தீ விபத்தால் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் வெடித்துச் சிதறின என்றும் தெரிவிக்கப்பட்டது.

511 ஆவது படையணியின் முகாமிலேயே இத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இராணுவ முகாமுக்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை தொடர்பாக பாதுகாப்புச் சபைக்கு விளக்கமளிக்க கீ-மூனைக் கோருகிறது அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 10

ஐ.நா செயலாளர் நாயகம் இலங்கை தொடர்பாக தொடர்ந்தும் பாதுகாப்புச் சபைக்கு விளக்கமளிக்க வேண்டுமென அமெரிக்கா விருப்பம் வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக ஐ.நாவில் அடுத்து என்ன நடைபெறும் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், ஐ.நாவிக்கான அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த ரோஸ் மேரி டி-கார்லோ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் உள்ள அம்சங்கள் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது குறித்து பான்-கீ-மூன் தொடர்ந்தும் பாதுகாப்புச் சபைக்குத் தெரிவிக்க வேண்டு மென அமெரிக்கப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வண்ணார்பண்ணை அருள்மிகு காட்டுத்துறை
அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில்

## மகோற்சவம் - 2009

12.06.2009 - வெள்ளிக்கிழமை
கொடியேற்றம் - காலை 10.15 மணி

16.06.2009 - செவ்வாய்க்கிழமை
தண்டிகைத் திருவிழா- மாலை 5 மணி

19.06.2009 - வெள்ளிக்கிழமை
சப்பறத்திருவிழா- மாலை 5 மணி

20.06.2009 - சனிக்கிழமை
தேர் உற்சவம்- காலை 10 மணி

21.06.2009 - ஞாயிற்றுக்கிழமை
தீர்த்தோற்சவம்- காலை 10 மணி
கொடியிறக்கம்- மாலை 4 மணி

விநாயகப்பெருமானுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் - வெள்ளோட்ட விழா (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறும்.

ஆலய அறங்காவலர்கள்.

சிவமயம் சக்தி துணை

ஊரெழு மேற்கு சக்திபுரம் சிவபூரணி
மாரியம்மாள் தேவஸ்தானம்
(ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

## மகா கும்பாபிஷேக பெருவிழா - 2009

அம்பிகை மெய் அன்பர்களே!
ஊரெழு மேற்குப் பகுதியில் அற்புதங்கள் புரிந்து அருளாட்சி நடத்தி வரும் அம்பாளின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை (11.06.2009) வியாழக்கிழமை மு.ப. 10.28 - 11.45 க்கு இடையே உள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வுகளில் அம்பிகை அடியார்கள் கலந்து கொண்டு அருள் பெற்றுப் பெரு வாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

ஆலயத்திருப்பணி சபையினர்.

# இலங்கையில் தமிழர்கள் முழு உரிமையுடன் வாழும் காலம் விரைவில் உருவாகும்

## தமிழ்த் தொண்டன் இராம.வீரப்பன் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 10

இலங்கையில் வாழும் தமிழர்கள் முழு உரிமையுடன் இலங்கையர்களாகவே வாழும் காலம் விரைவில் உருவாகும் என தமிழ்த் தொண்டன் இராம.வீரப்பன் தெரிவித்தார்.

உலகத் தமிழ் நிலையத்தின் சார்பில் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மறு வாழ்வு குறித்து உலகளாவிய அறிஞர்களின் கருத்துகளை கேட்டறிவதற்கான ஆலோசனைக் கூட்டமும், மேற்படி மையத்தின் மூன்றாவது தமிழ் மாநாடும் நேற்று முன்தினம் சென்னையில் உள்ள சவேரா ஹொட்டலில் நடைபெற்றன.

இந்த மாநாட்டினை அருளாளர், தமிழ்த் தொண்டன் இராம.வீரப்பன் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் போராட்டத்திற்கிடையேதான் தமிழும் வளர்கிறது. தமிழனும் வளர்கிறான். இது சரித்திரம் காட்டும் உண்மை நிலை. இந்த மாநாட்டை தொடங்கி வைப்பதற்கு எம்மை ஏன் அழைத்தார்கள் என்று யோசித்துப் பார்க்கும் போது தமிழுக்குத் தொண்டனாக இருந்து பணியாற்றுவதால் அழைத்திருப்பார்கள் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாநாட்டில் உலகத் தமிழ் மையத்தின் தலைவரான வின்ஸ்டன் பஞ்சாட்சரம் இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலை மற்றும் அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு பணிகள் குறித்த தன்னுடைய கருத்தினை பதிவு செய்தார்.

இந்த கருத்தரங்கில் முன்னணி ஊடகவியலாளர் பகவான் சிங், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் சூரியநாராயணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இம் மாநாட்டில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்த இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மணிமேகலை கண்ணன், திருமதி சுதா ரகுநாதன், உலக தமிழர் பேரவையின் தலைவர் இரா.ஜனார்தனன், சந்திரஹாசன் உள்ளிட்ட ஏராளமான இன உணர்வாளர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (50)

## தென்மராட்சியில் வீதி விபத்துக்களில் ஐவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 5பேர் காயமடைந்தனர்.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் இ.கனகரத்தினம் (வயது 63), மோகனதாஸ் (வயது 44), எஸ்.சண்முகராசா (வயது 40) ஆகியோரும் சங்கத்தானைப் பகுதியில் வீதி ஓரத்தில் போடப்பட்ட கற்குவியல் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் ஈஸ்வரதாசன் நிசாந்தன் (வயது 16) என்பவரும் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தவசிக்குளத்தைச் சேர்ந்த இ.செல்வகுமார் (வயது 23) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஈ.நிசாந்தன் கைமுறிந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (1-207)

## குடாக்கடலில் தொழில் செய்வதற்கு எரிபொருள் அளவு 15 லீற்றராக அதிகரிப்பு

வண்ணை, ஜூன் 10

யாழ்.குடாக்கடல் நீரேரியில் வெளி இணைப்பு இயந்திரங்களில் சென்று மீன்பிடியில் ஈடுபடுவதற்கான எரிபொருளின் அளவைப் படையினர் அதிகரித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் அனுமதித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வரை காலமும் நாளொன்றிற்கு 5 லீற்றர் எரிபொருள் மட்டுமே அது மதிக்கப்பட்டு வந்தது. இப்பொது 15 லீற்றர் எரி பொருள் அனுமதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

பருவப் பெயர்ச்சிக்காற்று மிகப் பலமாக வீசி வருவதால் இவ்விதம் எரிபொருள் அதிகரிக்கப் பட்டிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (1-160)

## யாழ் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு உலக சுகாதார நிறுவனம் 100 மில்லியன் ரூபா உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 10

உலக சுகாதார ஸ்தாபனத்தினர் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளுக்கென 100 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் உபகரணங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மருந்து வகைகளும் உபகரணங்களும் நேற்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் உலக சுகாதார ஸ்தாபன தேசியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹரிஸ்சந்திரய்க்கண்டவல கையளித்தார். (1-207)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணித ஆசிரியர்
க.சிவபாதம் அவர்களின் அன்புத் தந்தை
அமரர் பொன்னம்பலம் கந்தப்பிள்ளை
அவர்களின் மறைவினை இட்டு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

### இராசையா பாலசுப்பிரமணியம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலசுப்பிரமணியம் நேற்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா -கனகம் தம்பதியினரின் அன்பு மகனும் நடராசா -பவளம் தம்பதியினரின் மருமகனும் விமலாதேவியின்(மலர்) அன்புக் கணவரும் விஜிதா (கனடா), ஜனா (கனடா), கண்ணதாசன் (லண்டன்), லதா ஆகியோரின் அன்புத் தந்தையும் கலையரசன், உதயகுமார், சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சன், தர்சிகா, நிரோஜன், சோயனா, சியானா, குகப்பிரியன், சத்தியப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் மகாதேவன், சண்முகசுந்தரம், பவளம், இரத்தினசிங்கம், தங்கராசா, தவமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேந்திரம், பாலசுந்தரம், சின்னக்குஞ்சு, தவராஜலிங்கம், தனபாலசிங்கம், தேவராஜலிங்கம், கௌசலாதேவி, லிங்கம், சரஸ்வதி, மணி, வசந்தா ஆகியோரின் மைத்துனரும் தேவராசா, காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் யோகநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2009) புதன் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். தொ.பே: 021 222 6110

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் தன்னியக்க பணமாற்று இயந்திரம் (ATM) அறிமுகம்

யாழ்.குடாநாட்டில் இலங்கை வங்கியின் (ATM) சேவைகள்



- யாழ். அதி மேற்தரக்கிளை
- யாழ். போதனா வைத்தியசாலை
- யாழ். இரண்டாம் மேற்தரக்கிளை
- திருநெல்வேலி
- சுன்னாகம்
- மானிப்பாய்
- அச்சுவேலி
- பருத்தித்துறை
- நெல்லியடி

தென்மராட்சி வாடிக்கையாளர்களுக்காக 10 ஆவது ATM இயந்திரத்தை சாவகச்சேரிக் கிளையில் ஆரம்பித்து வைப்பதன் மூலம் இலங்கை வங்கி பெருமகிழ்ச்சி அடைகிறது.

காலம்: நாளை (11.06.2009) வியாழன் மு.ப. 9.30 மணி

ஆரம்பித்து வைப்பவர்: திரு.ந.சிவரட்ணம் (உதவிப்பொது முகாமையாளர், வடபிராந்தியம்)

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிப்பதுடன் இச்சேவையின் மூலம் பயன்பெறுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி, சாவகச்சேரி.



ECONOMICS

S.வரதராஜன்

A/L 2009 கருத்தரங்கு

ஜூலை மாதம் 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24 ஆம் திகதிகளில்...

ஆரம்பம் 13.07.09 திங்கள்

| பெண்கள் பிரிவு | ஆண்கள் பிரிவு |
| --- | --- |
| 8.00 - 12.30 | 1.00 - 5.00 |

18.06 க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# 'வணங்கா மண்' பொருள்களுக்கு நேர்ந்த கதி!

போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கவென உணவுப் பொருள்கள், மருந்துப்பொருள்கள் மற்றும் வலது குறைந்தவர்களுக்கு உதவி உபகரணங்கள் என்பவற்றை எடுத்து வந்த கப்டன் அலி என்ற 'வணங்கா மண்' கப்பல், இலங்கை அரசாங்கத்தினால் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

போரினால் நிர்க்கதியற்று நிற்கும் தமது உறவுகளுக்கு, தொலைதேசத்தில் வாழ்ந்தாலும் உதவவேண்டும் என்ற பாச உணர்வுடன் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் வழங்கிய பொருள்களையே 'வணங்கா மண்' கப்பல் ஏற்றி வந்தது. உறவினர்கள் என்று மட்டும் இல்லாமல் உணவுக்கும் மருந்துக்கும் வழியின்றி தமது சொந்தங்கள் செத்து மடிந்துவிடக்கூடாது என்ற மனித உணர்வுடன் அனுப்பப்பட்ட உதவிப் பொருள்கள் அவை.

முல்லைத்தீவில் போர் பெருமெடுப்பில் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே, நாடு நாடாகச்சென்று புலம்பெயர் சமூகத் தொண்டர்கள் சேகரித்த உதவிப் பொருள்கள் அவை. அல்லல் உற்று ஒரு நேரக் கஞ்சிக்கும் வசதியின்றி இருந்த தமது உறவுகளுக்கு உதவவேண்டும் என்ற பரிவுடன், வாஞ்சையுடன் புலம்பெயர் தமிழ் மக்கள் அனுப்பி வைத்த உதவிப் பொருள்களுடனேயே 'வணங்கா மண்' பிரான்ஸிலிருந்து இலங்கை நோக்கிப் பயணமானது.

வன்னித் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கான உணவு, மருந்து மற்றும் பொருள்கள் பிரிட்டன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி என்ற பெருவரிசை நாடுகளில் வாழும் புலம்பெயர் மக்களால் உதவிப்பொருள்களென இரகசியமாக அன்றிப் பரகசியமாகவே சேகரிக்கப்பட்டன. அதுதொடர்பான தகவல்கள் உலகளாவிய ரீதியில் ஊடகங்களில் பிரசித்தப்பட்டிருந்தன.

'வணங்கா மண்' ஏற்றி வந்தபொருள்கள் இரகசியமாகவோ சட்டவிரோதமாகவோ திரட்டப்பட்டவை அல்ல. அந்தந்த நாட்டு அரசாங்கத்தின் பெருந்தன்மையோடும் தாராள மனதுடனும் அனுமதியோடும் அவை சேகரிக்கப்பட்டன. மிகக்குறிப்பாகப் பாதிக்கப்பட்ட வேற்று நாட்டு மக்கள் மீது கொண்ட இரக்கம், தாராள மனதுடன் அந்நாட்டுப் பிரசைகளும் தாமாக பரோபகாரம் செய்தனர்.

ஆனால், தமிழ் மக்களைத் தனது சொந்த மக்களென்று உரிமைகொண்டாடும் இலங்கை அரசாங்கம், மனித நேயத்துடன் சேகரிக்கப்பட்ட பொருள்களை கப்பலில் இருந்து இறக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்க மனம் இரங்கவில்லை.

இயற்கை அனர்த்தங்களின் போதும் சரி, மனிதனால் தோற்றுவிக்கப்படும் செயற்கை அழிவுகளின் போதும் சரி, தேச, இன, மதம் பாராது, பாகுபாடு காட்டாமல் நிர்க்கதிக்கு ஆளாகி அந்தரிக்கும் மக்களுக்கு மனிதாபிமான இதயத்துடன் உதவுவது மனிதனுக்குள்ள இயற்கையான இயல்பு. அதுவே மனிதத்துவமும் விசேட குணாம்சமும் ஆகும். அதனைச் செய்யத் தயங்குபவர்கள் மனிதர்கள் என்ற வகுப்புக்குள் அடக்கப்பட முடியாதவர்கள். ஏனெனில், ஐந்தறிவு ஜீவன்கள் கூட அடுத்த ஜீவன் துடிப்பதை பொறுக்கமுடியாது அவலக்குரல் எழுப்பி மற்றவற்றை அழைக்கும் இயல்பு கொண்டவை.

புலம்பெயர் தமிழ் மக்கள் பாச உணர்வோடும், மனித நேயத்துடனும் அனுப்பிய உதவிப் பொருள்களைக் கொண்டுவந்த கப்பல் அவற்றை மீண்டும் எடுத்துச் செல்கின்றது என்றால், இந்த நாட்டில் புத்தபெருமான் போதித்த தத்துவங்களும் மனித நேயமும் ஜீவகாருண்யமும் முற்றாகவே அற்றுப்போய்விட்டன என்பதற்கான குறியீடே எனக் கருதவைப்பதாகும்.

அதுவும், இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிக்க போதிய நிதி வளமும் ஏனைய வளங்களும் 'கம்மி' என்று ஒப்பாரி வைக்கும் அரசு, பிறப்பால் இலங்கையரான புலம்பெயர் தமிழ் மக்கள் அனுப்பிய பொருள்களை திருப்பி அனுப்பியது எந்த வகையிலும் ஏற்கக்கூடியதோ நியாயப்படுத்தவல்லதோ அல்ல!

நீண்ட நெடுந்தூரத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட உதவிப் பொருள்களை ஏற்றுக்கொண்டு அரசாங்கமே அதனை அகதிகளுக்கு விநியோகித்திருக்கலாம். வெளிநாட்டு அரசாங்கங்களிடமும் ஐ.நா.போன்ற சர்வதேச அமைப்புக்களிடமும் நிதிக்கும் நிவாரணத்துக்கும் கையேந்தும், உதவிகளை எதிர்பார்க்கும் அரசு, புலம்பெயர் தமிழர்கள் அனுப்பிய பொருள்களை கப்பலுடன் திருப்பி அனுப்பியதை எந்த வகை மனித சமூக இயல்புக்குள் அடக்குவது என்பதனை தமிழர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

அந்தந்த நாட்டு அரசாங்கத்தின் ஊடாக தமது உதவிப்பொருள்களை புலம்பெயர் மக்கள் உரிய வழிமுறையில்- நியமப்பிரகாரம் அனுப்பி இருந்தால், அதனை ஏற்று அகதிகளுக்கு விநியோகித்திருப்போம் என்று அரசாங்கம் நியாயம் கூறக்கூடும்.

எந்த விதிக்கும், நியமத்துக்கும் விதிவிலக்கு இல்லாமல் இல்லை. அது அந்தந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப, மாற்றி அமைக்கப்படுவது உண்டு. புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது தாய் நாட்டில் உள்ள சொந்தங்களுக்கு, இரத்த உறவுகளுக்கு ஆபத்தான நேரத்தில், நிர்க்கதியான நேரத்தில் உதவும் பொருட்டு வழங்கிய பொருள்களைப் பெற்று இந்த அரசு வழங்குவதால் எந்த நெறிமுறைக்கும் வழுவேறிவிடாது. அனுமதித்திருப்பின் அது மனித நேயத்தினதும் ஜீவகாருண்யத்தினதும் உச்சச் செயற்பாடாக அமைந்திருக்கும்.

போர் முடிந்துவிட்டது. வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் இங்கு திரும்பி, சொந்த நாட்டு வளர்ச்சிக்கு உதவலாம் என்று அறைகூவல் விடும் அரசுக்கு, புத்தபெருமான் போதித்த ஜீவகாருண்யம் புலம்பெயர் தமிழர்கள் சேகரித்த பொருள்களை ஏற்கும் விடயத்தில் எத்திசை மாறியது?

# லண்டன் நாடாளுமன்றக் கட்டடத்தில் இன்று கெறி எம்.பியுடன் தமிழர் அமைப்பு சந்திப்பு

## ரிம் மார்ட்டினுக்கு லண்டன் தமிழர்கள் பாராட்டு

லண்டன், ஜூன் 10

இலங்கைத் தமிழ் மக்களுக்காக உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்திவந்த வெளிநாட்டுப் பிரஜையான ரிம் மார்ட்டின் நேற்றுமுன்தினம் 21 நாள்களுக்குப்பின் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டபோதிலும் தொடர்ந்தும் ஈழத் தமிழரின் உரிமைக்காகப் போராடவிருப்பதாக அறிவித்துள்ளார்.

ரிம் மார்ட்டின் முன்னர் வன்னி பிரதேசத்தில் உதவிபுரியும் அமைப்பொன்றில் பணியாற்றியிருந்தார். அதனால் வன்னியில் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை நேரில் பார்த்திருக்கின்றார். ரிம் மார்ட்டின் தமிழ் இனத்தைச் சாராதவராக இருந்தும் வன்னி மக்களின் துன்பங்களை நேரில் பார்த்தமையால் அவர்களுக்காக பாடுபட முன்வந்தமையை பிரிட்டிஷ் தமிழர் அமைப்பு பாராட்டியுள்ளது. இந்த அமைப்பு தமிழர் சார்பில் முன்னெடுக்க விருக்கும் 5 அம்சச் செயற்பாடு திட்டமொன்றை பார்வையிட்ட பின்னரே ரின் மார்ட்டின் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

ரிம் மார்ட்டின் உடல்நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள தமிழர் அமைப்பு இம்மாதிரி தமிழர் பிரச்சினையில் அக்கறைகொண்டுள்ள அன்பர்கள் உண்ணாவிரதம் இருப்பதைவிட பகிரங்கமாக இறங்கி பணியாற்றுவதே சிறப்பாகவிருக்கும் என்று தெரிவித்துள்ளது.

தமிழர் அமைப்பு முன்னெடுத்திருக்கும் வேலைத் திட்டங்களில் முக்கியமான ஒன்றின் விவரம் வருமாறு.

புதன்கிழமை இன்று பி.ப. 2 மணிக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் கெறி மக்கார்த்தியுடன் சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. நாடாளுமன்ற கட்டடத்தில் இச்சந்திப்பு இடம்பெறும் . தமிழர்கள் இதில் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் வன்னிச் சம்பவங்களால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நலன்புரி முகாம்களில் உள்ளவர்களுடன் தொடர்புடையவர்கள் இந்தக் கூட்டத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள முன்வரவேண்டும் என்று போராட்டம் நடத்தி வரும் மாணவர் குழு கேட்டுள்ளது. அத்துடன் தாங்கள் வாழும் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு வன்னி நிலைமைகளை அறிந்துகொள்ளும் படியாக வற்புறுத்தும்படியும் மாணவர்கள் கேட்டுள்ளனர்.

'ரைம்ஸ்' பத்திரிகை மற்றும் 'சனல் -4' செய்தி நிறுவனம் போன்ற ஊடகங்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருப்பதால் அவர்கள் இலங்கையின் உண்மை நிலைமை களை அறிந்து கொள்வது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நாவுக்கு பிரிட்டனும் பிரான்ஸும் கடும் அழுத்தம்

## பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 10

பிரிட்டனும் பிரான்ஸும் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. அதன் விளைவாகவே அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விவகாரத்தில் பொறுப்புத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை குறித்துப் பேசியுள்ளது என்று மனித உரிமைகள் அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம்குறித்து தொடர்ந்து தகவல் வெளியிடுகையில் அவர் கூறியதாவது:

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கம் முன்வைத்த பிரேரணை அண்மையில் அமோக வெற்றியீட்டியது. இந்நிலையில் இலங்கையை அசௌகரியத்துக்கு உள்ளாக்க மேற்குலக நாடுகள் எடுத்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. முக்கியமாகப் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் எடுத்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

எனவே குறித்த இரண்டு நாடுகளும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு அழுத்தம் விடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கலாம். காரணம் மனித உரிமை பேரவையில் பிரிட்டன்மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் 47 நாடுகளில் இரண்டு நாடுகளாக உள்ளன. ஆனால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் பிரிட்டனும் பிரான்ஸும் ஐந்து நாடுகளில் இரண்டு நாடுகளாகப் பலம் பொருந்தியுள்ளன. அங்கு அந்த நாடுகளுக்கு அதிக பலம் உள்ளது என்பதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவே உள்ளன. இலங்கைக்கு எதிராக அழுத்தம் தெரிவிக்குமாறு பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தெரிவித்திருக்கலாம். அதன் காரணமாக ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பொறுப்புடைத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து பேசியிருக்கலாம். அது குறித்து நாங்கள் அலட்டிக்கொள்ளவேண்டியதில்லை. எமக்கு முன் வருகின்ற சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்கலாம். மேலும் பிரிட்டனில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது என்பதனையும் நாம் மறந்து விடக்கூடாது. தேர்தலை இலக்கு வைத்து இலங்கை மீதான அழுத்தத்தை அதிகரிக்க முயற்சிக்கலாம் - என்றார்.

# வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன் 10

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 பாதையூடாக வாகனத் தொடரணியில் பொருள்களைக் கொண்டுவரும் வர்த்தகர்கள், யாழ்ப்பாணத்திலிருந்து பொருள்களை வாகனத் தொடரணி மூலம் கொழும்புக்கு அனுப்ப இருக்கும் வர்த்தகர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஏ-9 பாதையூடாகப் பொருள்களைக் கொண்டுவரும் கொண்டு செல்லும் வர்த்தகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வணிகர்கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 28 | 11.06.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | முழுவதும் |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | மு.ப.9.15 வரை |
| சுபநேரம்: | 07.22 - 05.52 |
| ராகுகாலம்: | 01.22 - 02.52 |

# சுற்றாடல் புகைப்படப் போட்டியில் யாழ்.மாணவி தேசிய ரீதியில் மூன்றாம் இடம் பெற்றார்



யாழ்ப்பாணம், ஜூன் 10

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் புகைப்படப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி செல்வி ஜசோ சிறிஸ்கந்தராஜ் வடமாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவருக்குத் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம் கிடைத்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி விழிப்பூட்டல் பிரிவின் ஒழுங்குபடுத்தலுடன் பாவனைக்குப் பின்னரான பிளாஸ்டிக் கழிவுப் பொருள் முகாமைத்துவ தேசிய கருத்திட்டத்தின் நிதி உதவியுடன் இப்போட்டி நடத்தப்பட்டது.

செல்வி ஜசோ வடமாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக 3,000 ரூபாவும் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றமைக்காக 10,000 ரூபாவும் பரிசாக பெற்றுள்ளதோடு சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

இது சம்பந்தமான புகைப்பட காட்சி கடந்த 4ஆம், 5 ஆம், 6ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றது. பரிசளிப்பு விழா கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (50)

# அரசியல் தீர்வுக்கான முயற்சியில் அரசாங்கம் தமிழ்க் கட்சிகளுடன் நெருங்கிச் செயற்படுகிறது

## பிரிட்டிஷ் அமைச்சரிடம் றோகித தெரிவிப்பு

லண்டன், ஜூன் 10

அரசியல் தீர்வுக்கான முயற்சியில் தமிழ்க்கட்சிகளுடன் அரசாங்கம் நெருங்கிச் செயற்பட்டுவருகின்றது. சர்வகட்சிக் குழுவும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கமைய தீர்வுத் திட்டத்தை முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்டை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தபோது இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் நலன் விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் குறித்தும் போகொல்லாமக அவருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியேற்றுவதற்கு நிலக் கண்ணிவெடிகள் பிரச்சினையாக இருக்குமானால் அவற்றை அகற்றுவதற்கு பிரித்தானிய நிபுணர்களின் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மில்லிபாண்ட் அமைச்சர் போகொல்லாகமவிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை-அமைச்சர் போகொல்லாகம சார்க் அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மாவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இச்சந்திப்பின் போதும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடி யேற்றம் குறித்து ஆராயப்பட்டது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CATHOLIC COLLEGE HIGHER STUDIES (CCHS)**
**Ahavoli, St.Patrick's Road, Jaffna.**
**ENGLISH COURSE LEADING TO DIPLOMA INTERMEDIATE LEVEL**
New Batch (6th Batch ) Begins in JULY
Apply on forms before 30.06.2009.
Applicants should posses at least O/L English.
**Please Contact Ahavoli.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆரோக்கியநாதர் ஜேர்மீனம்மா

(இரத்தினம்)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கிய நாதர் ஜேர்மீனம்மா (இரத்தினம்) 01.06.2009 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆரோக்கிய நாதரின் மனைவியும் சந்திரன், மாலா (பிரான்ஸ்), இந்திரன்(பிரான்ஸ்), தாசன் (லண்டன்), ஜெனிலா(பிரான்ஸ்) காலஞ்சென்ற அனிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரனிஸ்லஸ், லீலியா, கலிஸ்ரா, நாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2009) புதன் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பஅடு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீற்றம்மாள் கோயிலடி,
இளவாலை வடக்கு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## வன்னித்தம்பி சின்னத்துரை

(இளைப்பாறிய நில அளவையாளர்)



தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் , கொண்ட வன்னித்தம்பி சின்னத்துரை 08.06.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வன்னித்தம்பி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை சீவரத்தினம் மற்றும் சிவபாக்கியம், நவரத்தினம், ஆகியோரின் சகோதரரும் டயனி (கனடா), சாமினி (சுவிஸ்), விசயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரூபன் (கனடா), நகுலேந்திரன் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல் (கனடா), அனோஜா (கனடா), சஜீவன் (சுவிஸ்), சர்மிலா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, சேர்.பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கணபதிப்பிள்ளை பரமசாமி

(முன்னாள் உரிமையாளர், பரமராஜா ரான்ஸ்போட் சேவிஸ்)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வாழ்விடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமசாமி 09.06.2009 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்தபுதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் தவமணியின் பாசமிகு கணவரும் சாந்தநாயகி (அதிபர், யா/நுணாவில் மேற்கு அ.த. க.பாடசாலை),செல்வமணி (சுவிஸ்), தர்மேந்திரன் (பரமராஜா-லொறி உரிமையாளர்), அமரர் அருள்மணி, கிரியா (கனடா), ஜெயந்திரன், சிவநேந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேஸ்வரன் ( முன்னாள் பாதுகாப்பு பரிசோதகர், யாழ்.பல்கலைக்கழகம்), தர்மேந்திரன் (சுவிஸ்), சர்வேஸ்வரி, சச்சிதானந்தம், நற்குணராசா (கனடா), நளாயினி, யசிந்தா (நோர்வே), கயதீபன் (கனடா), பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனகன் (கனடா), சஞ்ஜீவன் (ATI மாணவன்), கோமகள் (இராமநாதன் நுண்கலைப்பீடம்), தர்சிகா (சுவிஸ்), சோபிகா (சுவிஸ்), லதாங்கி ( ATI மாணவி), ஹம்சத்வன் (சென்ஜோன்ஸ் கல்லூரி), அம்ஸன் (கனடா), சபிஸன் (கனடா), சிந்துஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), காஞ்சனா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), லக்சயா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஹரினி (சுவிஸ்), அபிலயா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும், நமசிவாயம், மகாலக்சுமி, தெய்வேந்திரம், சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரஞ்சோதிநாதன், தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான அப்பாச்சாமி, நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2009) வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
T.P: 0776062746, 0712406098
0778874019

190ஆம் கட்டையடி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(86057)

# புதிய எம்.பிக்கள் இருவர் நேற்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூன் 10

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருவர் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

காலஞ்சென்ற அமைச்சர் அமரசிறி தொடங்கொடவின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட சந்திம வீரக்கொடியும், காலஞ்சென்ற ஐ.தே.கவின் மாத்தளை மாவட்ட எம்.பி. அலிக் அலுவிகாரவின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட நந்திமித்திர எக்கநாயக்கவுமே புதிய எம்.பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்தனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடியபோது முதலில் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

இதேவேளை, காலஞ்சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட எம்.பி. பத்மநாதனின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தோமஸ் வில்லியம் விரைவில் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# செட்டிக்குளம் முகாம்களை பார்வையிட்டார் அகாஷி

கொழும்பு, ஜூன், 10

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள விசேட பிரதிநிதி யசூசி அகாஷி வடபகுதியிலுள்ள அகதி முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

செட்டிக்குளம் பகுதியிலுள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அங்குள்ள மக்களை யசூசி அகாஷி நேற்றுக்காலை வேளையில் பார்வையிட்டுள்ளார் என அரச இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அவரது இந்த விஜயத்தின் போது ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவும் உடனிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அங்குள்ள மக்களின் குறைகளை இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி கேட்டறிந்து கொண்டுள்ளார்.

திங்கட்கிழமை இரவு இலங்கை வந்து சேர்ந்த அகாஷி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து அவர் இந்தியாவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் எனவும் அவரது இந்திய விஜயத்தின் போது இலங்கையின் நிலைமைகள் குறித்து இந்திய உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட அகாஷி திட்டமிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# ஆணைக்குழு இணைப்பாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 10

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு கிழக்கு அலுவலகங்களில் உள்ள பிராந்திய இணைப்பாளர், விசாரணை அதிகாரிகள் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்று கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களில் நீண்டகாலமாகவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

விண்ணப்பித்தவர்களை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு ஆணைக்குழு கேட்டுள்ளது. (1)

# சாவகச்சேரி கிளையின் பணப்பரிமாற்றச் சேவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை (ஏ.ரி.எம்.) நாளை வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கிளை முகாமையாளர் க.சந்திரகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் ந.சிவரட்ணம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (1-207)

## தவறிவிட்டது

நேற்று (09.06.09) செவ்வாய்கிழமை கஸ்தூரியார் வீதி ஊடாக செல்லும் போது ராஜா கிறீம் ஹவுசிற்கும், தட்டார் தெரு அரசடிப் பிள்ளை யார் கோவிலிற்கும் இடையில் ஒரு தொகை பணம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 07761 41374, 0776913094 ஆகிய தொலைபேசி இலக்கங்களு [illegible] சன்மானமாக வழங்கப்படும்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சு.வ சின்னத்துரை

(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)

எமது சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும் முன்னாள் கணக்காய்வாளரும் ஆகிய சு.வ.சின்னத்துரை அவர்களின் மறைவையிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம்.
(வடபகுதி)

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் கோபால் (கார்க்காரக் கோபால்)



பூதவராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கோபால் நேற்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-காளிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (மொடோன் ரெக்ஸ் - பருத்தித்துறை), செல்வநாயகம்(இ.போ.சபை, பருத்தித் துறை, முல்லைத்தீவு), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சௌந்தரராஜன் காலஞ்சென்ற சௌந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயலக்சுமியின்(ஜெயா - பளை ,தம்பகாமம்) அன்பு மாமனாரும். தவரூபனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2009) புதன் கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித் துறை சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பூதவராயர் கோவில் ஒழுங்கை,
பருத்தித்துறை.
தொ.பே: 0774659748

தகவல்:
கோ.சௌந்தரராஜன்(மகன்).

## திருமதி பரம்சோதி இராசரட்ணம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரம்சோதி இராசரட்ணம் நேற்று(09.06.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேல்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராசேந்திரம் (கண்டி), இராஜகோபால் (கொழும்பு), கமலாதேவி, இராஜேஸ்வரி (கொழும்பு), யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கம், காலஞ்சென்ற நடராஜா மற்றும் ஸ்ரீஸ்கந் தராஜா, லோகேஸ்வரன், கெங்காதேவி, நந்தேஸ்வரி ஆகி யோரின் அன்பு மைத்துனியும், பபி (லண்டன்), சென்னா (கொழும்பு), கிளி (லண்டன்), சந்திரன் (லண்டன்), இராசன் (லண்டன்), கண்ணன் (லண்டன்), ஸ்ரீ (லண்டன்), பேபி (லண்டன்), தீபா, வசந்தன் (கண்டி), கஜன், சிந்து (கொழும்பு) ஆகியோரின் பெரி யதாயும், மாலா, ஸ்ரீகரன், வாசகன், அனு, மாலதி (லண்டன்), பவுண் (கண்டி), மூர்த்தி (கொழும்பு), பரம், பிரகாஷ், காயா, சோழன் (லண்டன்), கிருஷ்ணா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனனி, ஆரணி, சுயாணி, பானு, வினோ, ஜானு, விக்கினன், சாம்பவி, அருண், கீரன், றூபன், ஷெறினா, பிரவீன், மதுஷா, அபி, ஆருஷ், ஹாஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2009) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்வை ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பெ.லோகேஸ்வரன்,
வல்வெட்டி. T.P : 0602215228

## பொன்னம்பலம் கந்தப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



வாரிவளவு, காரைநகரைச் சேர்ந்த பொன்னம்பலம் -மீனாட்சி தம்பதியினரின் மகனும் திரு.திருமதி.இராமலிங்கம் தம்பதியினரின் மருமகனுமாகிய கந்தப்பிள்ளை 08.06.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், வேதநாயகி (கனடா), காலஞ்சென்ற சிவபுண்ணியம் ஆகியோரின் சகோதரரும் சிவபாதம் (ஆசிரியர் , மானிப்பாய் இந்துக் கல்லூரி), புவனேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் தகப்பனாரும் மகாலட்சுமி (ஆசிரியை, முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), கணேசமூர்த்தி (அதிபர், சுந்தரமூர்த்தி வித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் மாமனாரும் சாரதாதேவி (உபதபாலதிபர், நவாலி), சிவகௌரி (குவைத்), ஸ்ரீபவன் (மருத்துவபீட மாணவன்), பிரசாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), சஜீ (நல்லூர் பிரதேச செயலகம் ), ஆரூரன் (குவைத்) ஆகியோரின் பேரனும் டினுஷியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கருவேலடி லேன்,
கொக்குவில், 060 221 0082

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன மருந்து விசிறப்பட்ட மாம்பழங்கள் குடாநாட்டுச் சந்தைகளில் அமோக விற்பனை

## நோய்கள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை



யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் இரசாயன மருந்துகளை உபயோகித்துப் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தற்போது மாம்பழ 'சீசன்' ஆரம்பமாகியுள்ளதால் இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி சில வியாபாரிகள் மாங்காய்களைப் பிடுங்கி அவற்றுக்கு இரசாயன மருந்துகளை விசிறுவதாகவும் அவை பழுத்த பின்னர் அவற்றைச் சந்தைகளில் விற்பனை செய்வதாகவும் நுகர்வோர் மேலும் தெரிவித்தனர்.

இந்த மாம்பழங்களில் இருந்து இரசாயன மருந்துகளின் மணம் வீசுவதாகவும் இவற்றின் சுவை புளிப்புத்தன்மை கொண்டதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரசாயன மருந்து விசிறப்பட்டு பழுக்க வைத்த மாம்பழங்களைச் சாப்பிடுவதால் நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாகச் சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

திருநெல்வேலி, சாவகச்சேரி, யாழ்.நகர், மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய சந்தைகளில் இந்த இரசாயன மருந்து தெளிக்கப்பட்ட மாம்பழங்கள் கூடுதலான அளவில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைக்கோலில் பழுக்கவைத்த மாம்பழம் என்று கூறி வியாபாரிகள் இவற்றை விற்பனை செய்து வருகின்றனர் என நுகர்வோர் கூறுகின்றனர்.

இந்த் மாம்பழங்களைச் சாப்பிடுவதால் மக்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்படலாம் எனவும் இவற்றை விற்பனை செய்வோர் மீது சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

## ஆரம்பப்பிரிவு மாணவருக்கு சமாதானக் கல்விச் செயற்பாடு

வண்ணை,ஜூன்10

சமாதான மற்றும் நல்லிணக்கத்துமான பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான சமாதானக் கல்வி செயற்பாடுகள் நாளையும் மறுதினமும் நடைபெறவுள்ளதாகப் பணியக இணைப்பாளர் செல்வி சோபனா யோகலிங்கம் அறிவித்துள்ளார்.

11ஆம் திகதி வியாழக்கிழமை இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையிலும், 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயத்திலும் நண்பகல் 12-மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இச் செயற்பாடு நடைபெறவுள்ளது. (203- 160)




# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 16ஆவது வருட மாநாடு இன்று புதன் கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

**முதல் நாள் அமர்வு**

இன்று காலை 8.45 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர் முதுநிலைப் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் தலைமையில் ஆரம்பமாகும். செயலமர்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகவும், இலங்கை வங்கியின் வடபிரதேச துணைப் பொதுமுகாமையாளர் என்.சிவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து இவ்வருடத்தின் தொனிப்பொருளாக 'அனர்த்தங்கள் (Flood Hazards) வெள்ள அனர்த்தங்கள்' பற்றிய கலந்துரையாடல் நடைபெறும். வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நான்கு துறைசார் நிபுணர்கள் உரையாற்றுவர். கலாநிதி நா.சிவயோகன் 'வெள்ள அனர்த்தத்தின் விஞ்ஞானப் பின்னணி' பற்றியும், லோரென்ஸ் கிறிஸ்ரி ஆனந்த் 'விவசாயத்துறையில் வெள்ள அனர்த்தத்தின் பாதிப்புகள்' பற்றியும், கலாநிதி ஆர்.செந்தில்குமரன் 'நமது சுக வாழ்வுக்குண்டான பாதிப்பு' பற்றியும், என்.பிரதீபராஜா வெள்ள அனர்த்தங்களின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவர். இம்முக்கிய நிகழ்வில் யாவரும் கலந்து தங்கள் கருத்துகளைப் பரிமாறி தங்கள் ஐயப்பாடுகளையும் நீக்கிப் பயன்பெறலாம்.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது செயலமர்வில் தூயவிஞ்ஞான பிரிவுத் தலைவர் கலாநிதி ஜே.ப. ஜெயதேவன் மலேரியா எதிர்ப்பு மருந்துகளின் - நேற்றைய, இன்றைய, நாளைய நிலைப்பாடுகள் எனும் தலைப்பில் (Anit-malarial drugs:past, present, future) உரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து, நாம் எவ்வாறு சுகவாழ்விற்கு திறன்மிக்க முதலீடுகளைச் செய்யமுடியும் (Effective Investment on Health) என்பது பற்றி கலாநிதி கே.நந்தகுமாரன் உரையாற்றுவார். இச்செயலமர்வை வைத்திய கலாநிதி கே.சிவராஜா தலைமை தாங்கி நடத்துவார்.

முதல்நாள் இறுதிச் செயலமர்வில் பிரயோக விஞ்ஞானப் பகுதித் தலைவர் கலாநிதி ஜி.மிகுந்தனின் உரை இடம்பெறும். 'இன்னொரு பசுமைப் புரட்சியை நோக்கிய பயணம்' (Marchching Towards Another Green Revolution) எனும் பொருளில் தமது அறிவியல் சிந்தனைகளை முன்வைப்பார். கலாநிதி சிவமதி சிவசந்திரனின் தலைமையில் நடைபெறும் இச்செயலமர்வின் இறுதி நிகழ்வாக கலாநிதி சிவசாந்தினி குகநாதனின் உரை இடம்பெறும். (Fish- eries Sector in Northern Region of SriLanka) 'இலங்கையின் வடபிரதேசத்தில் மீன்பிடித்துறை' பற்றி தமது அறிவைப் பரப்புரை செய்வார். (50-9)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்துக்கு நன்கொடையாகக் காணி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்10

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் ஒரு நிரந்தரக்காணியைக் கொடையாளர்களிடம் இருந்து கோரியுள்ளது.

47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் விடுதியையும் 100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் அலுவலகத்தையும் கொண்டு இச்சங்கம் இயங்கி வருகின்றது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யாழ்.மாவட்டத்தில் பல்வேறு மாற்று வலுவுடையோர்களுக்குப் புனர்வாழ்வுகளை வழங்கிவரும் இச்சங்கத்திற்கு நிரந்தரமாக ஓர் இடம் இல்லாமை பெரும் குறைபாடாகவே காணப்படுகின்றது.

விழிப்புலன் இழந்தவர்கள், செவிப்புலன் இழந்தவர்கள், பேச்சு இழந்தவர்கள் மற்றும் உடலுள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டு சுயமாகச் செயற்பட முடியாதவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வேண்டிய உபகரணங்கள், ஆலோசனைகள், சிகிச்சைகள், பயிற்சிகள், தொழில் வழிகாட்டல்கள், பயிற்சிக் காலத்தில் தங்குவதற்கான வசதிகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றது. இந்த நிறுவனம் இந்நிலையில் சொந்தமான காணியைக் கொள்வனவு செய்யவோ கட்டடத்தை அமைக்கவோ முடியவில்லை.

தற்காலிக வீடுகளிலேயே இன்றுவரை இயங்கி வருகின்றது.

இந்த வீட்டின் சொந்தக்காரர்கள் எந்த நேரத்திலும் வீட்டினைத் திருப்பித் தரும்படி கேட்கலாம்.

அச்சந்தர்ப்பத்தில் இத்தனை மாற்று வலுவுடையோர்களுக்குமான செற்பாடுகளும் நிர்க்கதியற்றதாக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும்.

இதனை மனதிற்கொண்டு யாழ்.மாநகரசபை எல்லைக்குள்ளோ அல்லது அதை அண்டிய பகுதிகளிலோ பிரதான வீதிக் கண்மையில் அல்லது மாற்றுவலுவுடையோர்கள் இலகுவாக நடமாடக்கூடிய பாதையுள்ள பகுதியில் எமது நிலையத்திற்கான வீட்டுடன் கூடிய காணியையோ, அல்லது வெறுங்காணியையோ கொடையாக வழங்கி உதவுமாறு இரந்து நிற்கின்றோம். நிச்சயம் தாங்கள் கருணை காட்டுவீர்களென்பது எமது நம்பிக்கை - என்று வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (203)

# இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயில இராமாவிலில் வகுப்பறைகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூன்10

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை நிர்வாகத்தின் கீழ் இயங்கவுள்ள இந்த வகுப்பறைத் தொகுதிகள் திறந்துவைக்கப்பட்டன.

யுனிசெவ் நிறுவனத்தினரால் ஆயிரத்து 200 மாணவர்கள் கற்கக்கூடிய எட்டு வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.அரச அதிபர் க.கணேஷ், மேலதிக கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், 'யுனிசெவ்' நிறுவன கொழும்பு வதிவிட கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் பிரண்டா, அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். மாவட்டப் பிரதிநிதி ஈற்றா அம்மையார், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தற்போது நலன்புரி நிலையத்தில் உள்ள 600 மாணவர்களும் 40 ஆசிரியர்களும் இப் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய ம.வி. ஆகியவற்றில் உள்ள நலன்புரி நிலைய மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மங்கலவிளக்கினை யுனிசெவ் கல்விப்பிரிவுப் பொறுப்பாளர் பிரண்டா அம்மையார் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியினை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஏற்றிவைக்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ்.மாவட்டப் பிரதிநிதி ஈற்றா அம்மையார் உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட உயர் அதிகாரிகள் வகுப்பறைத் தொகுதியைத் திறந்துவைத்தனர். (1-207)

# அச்செழுவில் மிளகு உற்பத்தி

கோப்பாய்,ஜூன்10

அச்செழுப் பகுதியில் வீட்டுத்தோட்ட செய்கையின் மூலம் மிளகு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

5 மிளகுச் செடிகளை மரங்களில் படரவிட்டதன் மூலம் அதிலிருந்து 10 கிலோ மிளகு பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்செழு பகுதியைச் சேர்ந்த செல்வி தங்கம்மா நல்லதம்பி என்பவரே இவ்வாறு மிளகு செய்கைகளில் ஈடுபட்டவராவார்.

வலி.கிழக்குப் பிரதேச பிரிவில் வீட்டுத்தோட்ட செய்கை மூலம் இவர் வேளாண் மன்னர் பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (203-72)



கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் கொழும்பு அலுவலகக் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் பிரண்டா மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தேசியக் கொடியேற்றுவதை இரண்டாவது படத்திலும், யு.என்.எச்.சி.ஆர். நிறுவன யாழ்.மாவட்டப் பிரதிநிதி ஈற்றா வகுப்பறையைத் திறந்துவைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்து[illegible]றை மேற்கு, வதரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழாவில் பஞ்சமுக விநாயகர் தேருக்கு எழுந்தருளுவதையும் விநாயக[illegible]ர் புதிய சித்திரத் தேரில் ஆரோகணிப்பதையும் மற்றும் விநாயகப் பெருமான் தேரில் இருந்து பச்சை சாத்தி வருவதையும் படத்தில் காணலாம். (படங்கள்: நந்தன்)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.சுப்பிரமணியம் உலகநாதன் அவர்களின் அன்புத்தாய்

### சுப்பிரமணியம் மனோன்மணி

அவர்கள் கடந்த 23.05.2009 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலகம். ஊழியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

(சி/558927)

## ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தானம் கொடியேற்ற பெருவிழா விஞ்ஞாபனம் - 2009



விரோதி வருடம் வைகாசித் திங்கள் 29ஆம் நாள் (12.06.2009) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் பெருவிழா ஆரம்பமாகி நடைபெறும். 9ஆம் நாள் (20.06.2009) தேர்த்திருவிழாவும், (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும், மறுநாள் (22.06.2009) திங்கட்கிழமை பகல் விசேட சங்காபிஷேகமும் மாலை சண்டேஸ்வரி உற்ஸவமும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் அடியார்கள் கலந்துகொண்டு அம்பிகையின் அருளைப் பெறுமாறு அழைக்கின்றோம்.

ஆலய அறங்காவலர்.
ஊர்காவற்றுறை.

(85944)

## நலன்புரி நிலைய மக்களுக்கு உதவ பல்வேறு அமைப்புகள் நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 10

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உதவுவதற்கென குடாநாட்டு பல்வேறு பொது அமைப்புகள் இந்து அமைப்புகளின் ஒன்றியத்திடம் நிதி உதவிகளை வழங்கி வருகின்றன.

வெளிநாட்டில் வாழுகின்ற அன்பர்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், தனிப்பட்ட அன்பர்கள் எனப் பல்வேறு அமைப்புக்கள் நிதி உதவிகளை தாராள மனப்பாங்குடன் வழங்கி வருகின்றன.

மேலும் நிதி உதவிகளை வழங்கவிரும்புகின்றவர்கள் இல.144, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள இந்து அமைப்புகளின் ஒன்றிய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது.

(50-9)

## விற்பனைக்கு

தேக்கு மரத்திலான இரு அலுமாரிகளும் வேறு சில தளபாடங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 10A, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 06.03.1943

மறைவு 11.05.2009

### அமரர் நாகநாதர் கந்தையா

11.05.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு இல்லம் நாடி வந்து, எமது துன்பத்தில் பங்கெடுத்தும் பல்வேறு வழிகளில் உதவியும் செய்த சரசாலை மற்றும் நுணாவில் வாழ் மக்கள், சரசாலை வடக்குக் கிராம சேவையாளர், தென்மராட்சி பிறப்பு, இறப்பு பதிவாளர், யாழ். பிரதேச செயலகம், Land O' Lakes நிறுவனத்தினர், வைத்தியசாலை பணியாளர்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஊழியர்கள், விவசாய பீட நண்பர்கள், அகவொளி நண்பர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இன்று [10.06.2009] புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(86052)

தகவல்:
மனைவி, மக்கள்.


# JKOA பருத்தித்துறையில் இருந்து தேவேந்திரமுனை வரை தனது வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்குகிறது

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னாரில் **TOSHIBA** மற்றும் **RISO** பாவனையாளர்களுக்கு உதவிச் சேவை!

எம்முடன் தொடர்புகொண்டு உங்கள் இயந்திரத்தைப் பதிவு செய்யுங்கள். உங்கள் TOSHIBA பிரதியெடுக்கும் இயந்திரம், ஃபெக்ஸ் இயந்திரம், நோட்புக், புரொஜெக்டர், மற்றும் RISO டிஜிட்டல் டுப்ளிகேட்டர்களின் பராமரிப்பு அல்லது பொருத்தியிணைப்புக்கான உதவியை நாம் வழங்குவோம்.

எமது தமிழ்பேசும் பிரதிநிகளுடன் பேசுவதற்கு வார நாட்களில் (மு.ப.8.30க்கும் பி.ப.5.00க்கும் இடையே) 2313756 என்ற இலக்கத்திலும் அலுவலக நேரத்திற்குப் பின் அல்லது வார இறுதி நாட்களில் 0773182838 (மில்ரோய்), 0777725241 (அசோக்) ஆகிய இலக்கங்களிலும் தொடர்புகொள்ளவும்.

உங்கள் இயந்திரத்தை விரைவாகப் பதிவு செய்யுங்கள்! முதல் 25 பேருக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.




ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட் (JKOA) என்பது உலகப் புகழ்பெற்ற TOSHIBA மற்றும் RISO தன்னியக்க அலுவலக உபகரணங்களின் அதிகாரம்பெற்ற விநியோக நிறுவனமாகும்.

JKOA

ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
உதவிச் சேவை: 2445760, தொலைபேசி: 2313000, தொலைநகல்: 2431745
மின்னஞ்சல்: helpdesk@jkoa.lk இணையத்தளம்: www.jkoa.com

The 7th Frontier


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

**29.05.2009 Continuity.....**

ஞாபகக் குறிப்பு:-

மேற்கூறப்பட்ட வாக்கியங்களில் இருந்து இரண்டு விடயங்களை உணரமுடியும்.

1. ஒரு பூரண வாக்கியத்தில் ஒரு எழுவாயும், பொருள் முற்றுப்பெற்ற பயனிலையும் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒரு நிறைவற்ற வாக்கியத்திற்கு ஒரு எழுவாயும், பொருள் முற்றுப்பெறாத பயனிலையும் இருக்கும்.

**03. Principal clause and Subordinate clause**

**பூரண வாக்கியமும் நிறைவற்ற வாக்கியமும்**

முதலாவதாகத் தரப்பட்ட பூரண வாக்கியங்கள் ஆங்கில இலக்கணத்தில் Principal clause எனவும், இரண்டாவதாகத் தரப்பட்ட நிறைவற்ற வாக்கியங்கள் Subordinate clause எனவும் அழைக்கப்படும்.

சொற்றொடர்களில் பூரண வாக்கியங்கள், நிறைவற்ற வாக்கியங்கள் ஆகியவற்றை இனங்காண்போம் அல்லது பகுத்தறிவோம்.

1. சொற்றொடர் வாக்கியம் — When my mother came home I was reading.
எனது தாயார் வீட்டுக்கு வந்தபோது நான் படித்துக் கொண்டிருந்தேன்.
பூரண வாக்கியம் - I was reading.
நான் படித்துக்கொண்டிருந்தேன்.
நிறைவற்ற வாக்கியம் - When my mother came home
எனது தாயார் வீட்டுக்கு வந்தபோது

2. சொற்றொடர் வாக்கியம் — While my sister was sleeping, a cat came near her.
எனது சகோதரி உறங்கிக்கொண்டிருந்த வேளையில் ஒரு பூனை அவளருகில் வந்தது.
பூரண வாக்கியம் - a cat come near her.
ஒரு பூனை அவளருகில் வந்தது.
நிறைவற்ற வாக்கியம் - While my sister was sleeping
எனது சகோதரி உறங்கிக்கொண்டிருந்த வேளையில்

3. சொற்றொடர் வாக்கியம் — I saw a man who came from Jaffna.
யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒரு மனிதனை நான் பார்த்தேன்.
பூரண வாக்கியம் - I saw a man.
நான் ஒரு மனிதனைப் பார்த்தேன்.
நிறைவற்ற வாக்கியம் - who came from Jaffna
யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவரை

4. சொற்றொடர் வாக்கியம் — As soon as the Principal came to the class, students began reading books which were very interesting.
அதிபர் வகுப்புக்கு வந்தவுடன் மாணவர்கள் மிகச்சிறந்த புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினர்.
பூரண வாக்கியம் - students began to read.
மாணவர்கள் வாசிக்கத் தொடங்கினர்.
நிறைவற்ற வாக்கியம் - As soon as the Principal came to the class
அதிபர் வகுப்புக்கு வந்தவுடன்

5. சொற்றொடர் வாக்கியம் — The doctor who came from Kandy, told me that I was a sick man.
கண்டியிலிருந்து வந்த டாக்டர், நான் ஒரு நோயாளி என எனக்குக் கூறினார்.
பூரண வாக்கியம் - The doctor told me.
டாக்டர் எனக்குக் கூறினார்.
நிறைவற்ற வாக்கியம் - who came from Kandy
கண்டியிலிருந்து வந்திருந்தவர்.

6. சொற்றொடர் வாக்கியம் — Though we were drinking water, we could understand what the mother told
நாங்கள் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தோம் என்றாலும், தாயார் கூறியதை எங்களால் கேட்க முடிந்தது.
பூரண வாக்கியம் - we could understand.
நாங்கள் கேட்க முடிந்தது.
நிறைவற்ற வாக்கியம் - Though we were drinking water
நாங்கள் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தபோதும்

7. சொற்றொடர் வாக்கியம் — The speaker came to the point that everyone should die.
எல்லோரும் இறப்பர் என்ற முடிவுக்கு பேச்சாளர் வந்தார்.
பூரண வாக்கியம் - The speaker came to the point.
பேச்சாளர் முடிவுக்கு வந்தார்.
நிறைவற்ற வாக்கியம் - that everyone should die
ஒவ்வொருவரும் இறப்பர்

8. சொற்றொடர் வாக்கியம் — As we are little children we cannot learn Sinhala which is very difficult.
நாங்கள் சிறுவர்களாக இருப்பதனால் மிகவும் கடுமையான சிங்களத்தைப் படிக்க முடியவில்லை.
பூரண வாக்கியம் - we cannot learn Sinhala.
எங்களால் சிங்களம் படிக்க முடியவில்லை.
நிறைவற்ற வாக்கியம் - As we are little children
நாங்கள் சிறுவர்களாக இருப்பதால்

9. சொற்றொடர் வாக்கியம் — When it was morning my father told me a story which was very interesting.
காலைவேளையில் எனது தந்தையார் எனக்கு சொன்ன அந்தக்கதை மிகவும் சுவாரஸ்யமானது.
பூரண வாக்கியம் - my father told me a story
எனது தந்தையார் எனக்கு ஒருகதை சொன்னார்.
நிறைவற்ற வாக்கியம் - When it was morning
காலைவேளையிலே
which was very interesting.
அது மிகவும் சுவாரஸ்யமானது

10. சொற்றொடர் வாக்கியம் — If you learn well you will pass this year
நீ மிகவும் ஆர்வமாக (நன்றாக) படிப்பாயானால் இவ் வருடம் சித்தியெய்தமுடியும்.
பூரண வாக்கியம் - you will pass this year
நீ இந்தவருடம் சித்தியெய்தலாம்.
நிறைவற்ற வாக்கியம் - If you learn well
நீ நன்றாகப் படித்தாயானால்

**Complex Sentence - சிக்கலான வாக்கியம்**

சொற்றொடர்களைப் பகுப்பாய்வு செய்யும்போது (Analyse) ஒரு விடயம் குறித்து ஆராய்தல்வேண்டும். அநேகமான சொற்றொடர்களுக்கு பூரணவாக்கியம் (Principal clause) மட்டும் இருக்கும். ஆனால், நிறைவற்ற வாக்கியம் (Subordinate clause) ஒன்றுக்கு அதிகமாக நிறைவற்ற வாக்கியங்கள் உள்ள சொற்றொடரை சிக்கலான வாக்கியம் (Complex Sentence) எனக் கூறுகிறோம். நிறைவற்ற வாக்கியம் (Subordinate clause) இவ்வளவு எனக் கூற முடியாதவை சிக்கலான வாக்கியம் (Complex Sentence) ஆகும்.

**Subordinate clause - உப வாக்கியங்கள்**

சொற்றொடர்களைப் பாகுபாடு செய்யும்போது கிடைக்கக்கூடிய உப வாக்கியங்கள் (Subordinate clause) பல வகைப்படும். அவை பற்றி விரிவாக ஆராய்ந்து தெளிந்து கற்போம்.

**a. Adjective clause - பெயர் உரிச் சொற்றொடர்**

ஒரு சொற்றொடரிலுள்ள Adjective clause ஆனது ஏதாவது ஒரு பெயர்ச் சொல்லைத் தழுவிநிற்கும்.

Eg: - I saw a man who came from Jaffna.
உ+ம்:- நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒரு மனிதனைக் கண்டேன்.

இச்சொற்றொடரில் இரு clause கள் உள்ளன.

1. Principal clause - I saw a man.
பூரண/ பிரதான வாக்கியம் - நான் ஒரு மனிதனைப் பார்த்தேன்.
இவ்வாக்கியத்தில் **man** என்பது பெயர்ச் சொல்லாகும். அதை விசேடிப்பதால்,

Who came from Jaffna.

அவன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவன் எனும் உபவாக்கியம் (Subordinate Clause) வருகிறது. இதனை Adjective Clause - பெயர் உரிச்சொற் றொடர் என அழைப்பர்.

இப்போது நாம் பயின்ற Adjective Clause - பெயர் உரிச்சொற்றொடர் ஆனது Who என்ற சொல்லில் தொடங்குகின்றது. அச்சொல் வாக்கியத்தில் வரும் போது 'ஆன' என்ற பொருளில் காணப்படுகின்றது.

Adjective Clause - பெயர் உரிச் சொற்றொடரில் உயிர் இல்லாத பொருட்களை விசேடிக்கும் பொழுது Who என்ற சொல்லுக்குப் பதிலாக Which அல்லது that என்ற சொல் பயன்படுத்தப்படும்.

**சாதாரண பெயர் உரிச்சொற்றொடர்**

**Who,Which, that**

பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய பொருள் வேறுபாட்டினைக் காண்போம்.

E.g:- 1. I saw a man who came from Jaffna.
உதாரணம் நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மனிதனைப் பார்த்தேன்.

2. I saw a pen which is bad.
நான் ஒரு பழுதான பேனாவைக் கண்டேன்.

3. I saw a pen that was good.
நான் ஒரு நல்ல பேனாவைக் கண்டேன்.

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம்-22 இல் வெளிவரும்......

**மேலதிக தொடர்புகளுக்கு :-**
**உதயன் கல்விச்சுடர்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி -**
**071-4273035, 021-2223837**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்





யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சித்தர்களில் யோகர்சுவாமிகள் மிக முக்கியமானவர். கொழும்புத்துறைப் பகுதியில் ஆச்சாரமம் அமைத்துத் தன்னு... ய ஆன்மீகப் பணியினை செய்துவந்தவர். இவரது காலடித்தடம் பதிந்த கற்களைக் கொண்ட பாதக்கோயில் ஒன்று இன்றும் கொழும்புத்துறையில் உள்ளது. அவரின் இறைபணியை நினைவு கூரும்வகையிலும், காலத்தின் முதுசொமாகவும் இது மக்களால் வழிபடப்பட்டு வருகிறது. யோகர் சுவாமிகளின் புனித பாதம் பொறிக் கப்பட்டதாகக் கருதப்படும் கற்பாடி மத்தையும் அது அமைந்துள்ள ஆல யத்தையும் பரிபாலனசபையினரும், கல்விச் சமூகத்தினரும் பராமரித்துப் பேணிவருகின்றனர்.

(படமும் தகவலும்:நந்தன்)





(நன்றி:நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தொலைக்காட்சிச் சேவை இந்த நாட்டில் அறிமுகமாவதற்கு முன்னர் வானொலிச் சேவையே பொது மக்களது பாவனையில் முக்கிய இடத்தை வகித்து வந்தது. பிலிப்ஸ், குறுண்டிக் போன்ற பற்பல நிறுவனங்களின் தயாரிப்புக்களான வானொலிப் பெட்டிகளின் பாவனை பொதுமக்கள் மத்தியில் பிலபல்யம் பெற்றிருந்தன. இற்றைக்கு ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் பாவனைக் கெனக் கொள்வனவு செய்த இந்த வானொலிப் பெட்டி இன்றைக்கும்கூட இயங்கு நிலையில் இருப்பதாகக் கூறுகிறார் கல்வியங்காட்டைச் சேர்ந்த குடும்பஸ்தரொருவர். அவரது வீட்டில் அவர்களால் தற்போதும் பயன் படுத்தப்பட்டு வரும் அந்த 'பையதான' வானொலிப் பெட்டியையே படத்தில் காண்கிறீர்கள்.

(படமும் தகவலும்:நந்தன்)

மேற்படி புகைப்படம் 1918 களில் மேடையேற்றப்பட்ட சொர்ணலிங் கம் அவர்களின் மனோகரா நாடக நடிகர்களது புகைப் படமாகும். செல்வரத்தினம், பாலசிங்கம், சொர்ணலிங்கம் ஆகியோர் இப்புகைப்படத்தில் காணப்படுகின்றனர். வர்ணப்புகைப் படங் களின் வருகைக்கு முன்பாக கையால் வர்ணம் தீட்டல் என்ற மரபு பிரபல்யமாக பயில்வில் இருந்துள்ளது. இப்புகைப்படம் அவ் வகைப்பட்ட நுட்பவழியில் ஆக்கப்பட்டுள்ளது.

- பாலன்குட்டி

தொகுப்பு: ஒளண்யன்



படத்தில் நீங்கள் பார்ப்பது உலக சாதனை படைத்த "பீசா" என்று அழைக்கப்படும் உணவுப் பண்டத்தைத்தான். மேற்கத்தையவர்களிடம் அதிகம் பிரபலம் பெற்ற 'பீசா' உணவினை 400 கிலோகிராமில், 4 மீற்றர் விட்டத்தில் மிகப் பிரமாண்டமாக அமைத்து உலக சாதனை இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேம் நகரில் அண்மையில் நிகழ்த்தப்பட்டது. இச் சாதனை நடைபெற்றபோது பெருந்திரளான மக்கள் கலந்து பிரமாண்டமான பீசாவை பகிர்ந்து உண்டு மகிழ்ந்தனர்.



மின்சாரம் கண்டுபிடிக்கப்பட முன்னர் நம்மிடையே ஒளியூட்டல் தேவைக்காக பல்வேறுபட்ட விளக்குகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. தேவையின் பொருட்டு விளக்குகளின் வடிவங்களும் பெயர்களும் மாற்றமுற்றன. யாழ்.மக்களிடையே இந்துமத வழிபாடே அக்காலத்தில் அதிகமாக நிலவிவந்தது. ஆலயங்களில் எந்நேரமும் எரியக்கூடிய வகையிலும் சங்கிலியால் இணைக்கப்பட்டுத் தொங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட 'தூண்டாமணி விளக்குகள்' அதிகம் பயன்படுத்தப்பட்டன. இவ் விளக்குகள் தமிழர்களின் பண்பாட்டின் கூறுகளைக் கொண்டு கலையம்சத்தோடு அமைக்கப்பட்டன. அத்தகைய தூண்டாமணி விளக்குகளையே படத்தில் காண்கிறீர்கள். ★

(படமும் தகவலும்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டீசல் இயந்திரம் வெளிவிடும் புகை மூளையைப் பாதிக்கிறது

போக்குவரத்து நெரிசலான ஒரு இடத்தில் ஒருசில நிமிடங்கள் நின்று டீசல் புகையைச் சுவாசித்தால் உங்கள் மூளையில் பாதிப்பு ஏற்படுதல் சாத்தியம் எனச் சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

காற்றிலுள்ள சிறு துணிக்கைகள் சுவாசத்தின் ஊடாக உட்சென்று, குருதியில் கலந்து, மூளையை அடைந்து தங்கிவிடும் வாய்ப்புண்டு என முன்னைய ஆய்வுகள் தெரிவித்திருந்தாலும், தற்போதுதான் முதல்முதலாக டீசல் புகையிலுள்ள 'நானோ' துணிக்கைகள் சுவாசத்தினூடாகக் குருதியில் கலந்து, மூளையை அடைந்து அதன் செயற்பாடுகளைப் பாதிப்படையச் செய்கின்றன என விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாறு இங்கிலாந்திலிருந்து வெளியாகும் 'துணிக்கைகள் மற்றும் நார் வகைகளின் நச்சுவியல்' என்னும் மாதாந்த சஞ்சிகை தெரிவிக்கிறது.

நெதர்லாந்து 'சயட்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் போல் பொன் நடத்திய ஆய்வில் ஒவ்வொன்றும் பத்து தொண்டர்கள் இரண்டு குழுக்கள் தூய காற்று நிரம்பிய அறைக்குள்ளும், டீசல் புகை நிரம்பிய அறைக்குள்ளும் ஒரு மணித்தியால நேரம் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களது மூளைகள் இலத்திரனியல் 'என்சபயோகிராப்' கருவியுடன் இணைக்கப்பட்டிருந்தன. 30 நிமிடங்கள் கழித்து டீசல் புகை அறையுள் இருந்தவர்களது மூளையில் அழுத்தம் உருவாகியதை அந்த இலத்திரனியல் கருவியின் வரைபு துல்லியமாகக் காட்டியது. மற்ற அறையில் இருந்தவர்களது மூளையில் எவ்வகை அழுத்தமும் ஏற்பட்டதாக அந்தக் கருவி காட்டவில்லை.

## தகவல் பெட்டகம்



'இவ்வகை மூளை அழுத்தம் டீசல் புகையிலிருந்து மூளைப் பகுதிக்குச் செல்லும் 'நானோ' துணிக்கைகள் காரணமாகவே உருவாகிறது என நாம் நம்புகிறோம் எனக் கூறுகிறார் பேராசிரியர் போல்.



நெடுநாள் டீசல் புகையைச் சுவாசிப்பதன் காரணமாகச் சாதாரண மூளைத் தொழிற்பாடுகள் குழப்பமடைந்து தகவல் பரிமாற்றக் கட்டளைகள் பாதிப்படையும் சாத்தியம் உண்டு என மேலும் தெரிவிக்கிறார் பேராசிரியர் போல். ★

நன்றி: குறோனிக்கல்.




# மனமே சாய்ந்துவிடாதே!

06

மெய்ப்பாட்டு நோய்க்கு ஆளானவருக்கு உதவும் முறைகளை உதவிசெய்பவர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

★ நோயாளியை உடலியற் பரிசோதனைகள் செய்து எவ்விதமான உடலியல் நோய்களும் அவருக்கு இல்லை என்பதை தெளிவாக உறுதிப்படுத்தவேண்டும்.



உதவியாளர் நோயாளியை வைத்தியரிடம் கூட்டிச்சென்று ஆலோசனை பெற உதவலாம். அவர், தான் நோயாளியோடு கதைத்துப் பார்த்ததில் அவரின் மெய்பாடு காரணமாக உள சமூகப் பிரச்சினைகள் இருக்கக்கூடும் என்பதனை வைத்தியரிடம் சொல்லலாம். உடல் சம்பந்தமான நோய்கள் ஏதாவது இருக்கிறதா என வைத்தியர் பார்த்து அவ்விதமிருந்தால் அதற்கேற்ற மருந்தைக் கொடுப்பார். இல்லையாயின் உளவளத் துணை மற்றும் சிகிச்சைகளைத் தொடரும்படி சொல்லுவார். இவ்விதம் உடலியல் நோய்கள் இல்லாத ஒருவரை வைத்திய நிபுணருக்குச் சிபார்சு செய்வதையும், பல விதமான ஆய்வுகூடப் பரிசோதனைகளையும் பலமுறை தொடர்ந்து செய்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதால் அவர் தனக்கு ஏதோ பாரிய உடல் வருத்தம் இருக்கிறது என நினைத்துக் கொள்வார்.

★ பரிசோதனை முடிவுகளையும் செய்யப்படும் சிகிச்சை பற்றியும் நோயாளிக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

முன்பெல்லாம் நோயாளி வைத்தியரிடம் எந்தச் சந்தேகமும் கேட்கமுடியாது. அவர் சொல்வதைக் கேட்பதோடு கொடுக்கும் மருந்தையும் பெற்றுக்கொள்ள வேண்டியது தான். மருந்தின் பெயரைக்கூட சொல்ல முடியாது. சொன்னால் சில வைத்தியர்கள் "நாங்கள் எல்லாம் எதற்கிருக்கிறோம்." என்று சொல்வார்கள். ஆனால் இப்போது வைத்தியர்கள் நோயாளிக்கு வேண்டிய விளக்கங்களை அளிக்கின்றனர். வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வைத்திய நிபுணர்கள் நோய்கள் பற்றிய அடிப்படை அறிவையும் சிகிச்சை முறைகள் பற்றியும் விளக்குகின்றனர். கேள்விகளுக்கு விடைகளையும் அளிக்கின்றனர். நோயாளி தான் பயன்படுத்தும் குளிசைகளின் பெயர் எத்தனை மில்லிக்கிராம் அளவு என்பதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கின்றார். இது மிகவும் அவசியமானதும் கூட. தனக்குச் செய்யப்படும் சிகிச்சை பற்றியும் உளவளத்துணை என்றால் அது எப்படி நடக்கிறது என்பது பற்றியும் தெரிந்து வைத்திருத்தல் தேவைதான். நோயாளியின் நன்மை கருதி வைத்தியர் சில விடயங்களைச் சொல்லாமல் விடுவதுமுண்டு.

★ அவர்கள் கூறும் குணங்குறிகள் ஏதாவது கடுமையான வருத்தத்தின் தொடக்கமாக இருக்குமோ என அவர்கள் பயப்படக்கூடும். அது அப்படியல்ல பயப்படத் தேவையில்லை என்பதை அவர்களுக்கு உறுதியாகக் கூறிவிட வேண்டும்.

ஏதோ ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டாலும் அது பாரிய வருத்தத்தை ஏற்படுத்தாது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

★ உடலில் ஏற்படுகிற இயற்கையான நிகழ்வுகளே பயத்தையும் உடல் வலியையும் ஏற்படுத்தும்.

இதனை நோயாளருக்கு விளங்கப்படுத்த வேண்டும். எல்லோருமே ஒவ்வொரு நேரத்தில் பயத்தையும் வலியையும் அனுபவிக்கிறார்கள். தலையிடி எல்லோருக்கும் வரத்தான் செய்கிறது. தசைப்பிடிப்பு, விறைப்பு என்பனவும் பொதுவாகவே ஏற்படுகிறது. இந்த விவரங்களை அவருக்கு கூறலாம்.

★ தலையிடி, நெஞ்சுப் படபடப்பு, நித்திரைக் குழப்பம், பதற்றம், அதிகம் வியர்த்தல் என்று சொல்லிக் கொண்டு வருபவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு உளவளத்துணையும் சார்ந்த வழிமுறைப் பயிற்சிகளும் கொடுக்க வேண்டும்.

24 வயதுடைய பெண் இப்படியான முறைப்பாடுகளுடன் வந்த போது இவர் இயல்பாகவே பயந்த சுபாவம் உள்ளவர். என்பதையும் சிறிய சிறிய விசயங்களுக்கே பதற்றமடை பவர் என்பதையும் அவரின் தகப்பனாரிடமிருந்து அறிந்தோம். பிராணயாமம், சாந்தியாசனம் போன்ற சாந்த வழிமுறைகளைச் சொல்லிக்கொடுத்த போது அவரில் சில வாரங்களில் முன்னேற்றம் தெரிந்தது.

இர. சந்திரசேகர சர்மா M.A.

# நல்ல தூக்கம் எடையைக் குறைக்கும்



அதிக நேரம் தூங்கினால், எடை குறையும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. வாஷிங்டனில் உள்ள வால்டர் ரீட் இராணுவ மருத்துவ மையத்தில் சர்வதேச டாக்டர்கள் மற்றும் நிபுணர்கள் குழுவினர் நடத்திய ஆய்வில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வால்டர் ரீட் மருத்துவமனையைச் சேர்ந்த தாதிமார்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டதில் நன்றாகத் தூங்குவோரைவிட குறைந்த நேரம் தூங்குவோருக்கு எடை அதிகரிப்பது தெரியவந்துள்ளது. குறைந்த நேரம் தூங்கிக் கொண்டோருக்குப் பசி அதிகரித்தது. அதிகளவில் உட்கொள்கின்றனர். வளர்சிதை மாற்றத்தின்போது அவர்களின் எடை அதிகரிக்கிறது என்பது உறுதியாயிருக்கிறது.

- கலையரசன் -

# கும்பிடு பூச்சியின் விசித்திர வாழ்வு

உலகிலுள்ள விசித்திர பூச்சியினங்களில் இந்த கும்பிடு பூச்சியும் [Praying mantis] ஒன்று.

இது ஒரு மெல்லிய நீளமான பூச்சி, நகராமல் இருக்கும்போது தன் இரண்டு கைகளையும் ஒன்றாகக் கூப்பிக்கொண்டு மௌனமாகப் பிரார்த்தனை செய்வது போல் தோன்றும். நீளமான அதன் இரண்டு முன்னங்கால்களை ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கொண்டு இருப்பது கைகளைக் கூப்பிக்கொண்டிருப்பதுபோல் தெரியும்.

ஆனால் அது கும்பிடுவதும் இல்லை, பிரார்த்தனை செய்வதுமில்லை. உண்மையில் அது ஒரு இரத்த வெறிகொண்ட பூச்சி இனங்களில் ஒன்று என்று கருதப்படுகிறது. மற்றப் பிராணிகளைப் பிடித்து உண்பதன் மூலமே அது உயிர் வாழ்கின்றது. தன் முன்னங்கால்களை ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொண்டு அசையாமல் இருப்பது அருகில் வரும் இரையை 'சட்'டெனப் பிடித்துக் கொள்வதற்காகவே. மூடியிருக்கும் கால்களில் இரையைப் பிடித்துக் கொள்வதற்கான கூர்மையான அமைப்புகள் உண்டு.



கும்பிடு பூச்சியானது பறப்பதின் மூலமும் தனது நான்கு பின்னங்கால்களால் நடந்தும் இடம் விட்டு இடம் நகர்கின்றது.

தன் தலையைச் சுழற்றியும், தோளுக்கு மேலாகத் திருப்பியும் இரையைக் கவனிக்கும் திறன்கொண்ட பிராணி இது ஒன்றுதான் என்றும் கருதப்படுகின்றது. இன்னொரு பிராணி - ஈயாக இருக்கலாம். அருகில் வந்தால் தன் முன்னங்கால்களைப் பட்டென வீசி அதனைப் பிடித்து இறுக்கிவைத்துக் கொண்டு மெதுவாக உண்ணும். கும்பிடு பூச்சிகளில் சுமார் 800 வகை உண்டு. இவைகளுக்கு மண்ணிறத்தில் அல்லது பச்சை நிறத்தில் செட்டைகள் உண்டு. பெரும்பாலான இப் பூச்சிகளின் நீளம் 5 சென்ரி மீற்றர் ஆகும். ★

# நட்புக்காக

என்னை
சொந்தம்
கொண்டாடியபோதுதான்
உணர்ந்துகொண்டேன் -
எனக்கு
இன்னொரு தாய் நீ என்று...

# தேர்தல்

பணம்
கொடுத்தால் இங்கு
பாவிகளும்
கடவுளாய் நடமாடலாம்

- ஜே.எஸ்.ராஜ்
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாகப் பரவுகிறது டெங்கு நோய் 8 ஆயிரம் பேர் பாதிப்பு; 125 பேர் மரணம்

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் அதிவேகமாகப் பரவிவரும் டெங்குநோய் காரணமாக இதுவரை 125 பேர்உயிரிழந்துள்ளனர் என்றும் 8 ஆயிரம் பேர் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வைத்தியர்களிடமிருந்து கிடைக்கும் தகவலின்படி சுமார் 15 ஆயிரம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும் முன்னாள் சுகாதார அமைச்சருமான ரேணுகா ஹேரத் இதைத் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வரலாற்றில் என்றுமில்லாதவாறு நாட்டில் டெங்கு நோய் மிகத் தீவிரமாகப் பரவி வருகின்றது. இதை இல்லாதொழிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

டெங்கு நோயை முற்றாக ஒழித்துக் கட்டும் பொருட்டு 365 நாள்களும் மிகத் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால்தான் பயன் உண்டு. டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் இடத்தைச் அசுத்தமாக வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை மாத்திரம் உருவாக்குவதில் பயனில்லை.

சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்குப் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக உள்ளூராட்சி சபைகள் இதில் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

தற்போதுவரை இந்நோயால் நாடு முழுவதும் 125 பேர் உயிரிழந்துள்ளனர். 8 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். வைத்தியர்கள் தெரிவிக்கும் தகவலின்படி சுமார் 15 ஆயிரம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இந்நோயைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு தனித்துச் செயற்படாமல் கல்வி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட வேண்டும் - என்றார்.

(த- 07)

## சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை, கிராவளை ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகதின சங்காபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தையொட்டிய ஆலய திருத்தல் வரலாற்று நூலும் வெளியிடப்படவுள்ளது. (201)

* * * *

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு இன்று புதன் கிழமை அம்பாளுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட கொடிக் கம்பம் நடும் நிகழ்வு நடைபெறும். (201)


## அறவழி உற்பத்தியக திறப்பு விழா




கனேடிய உலகப் பல்கலைக்கழகச் சேவையின் 4.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அறவழி உற்பத்தியகத் திறப்புவிழா இன்று (10.06.2009) நடைபெறுவது குறித்து எமது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மின் ஒட்டு அலகு, தோல் பொருள் உற்பத்தி அலகினை இவ்உற்பத்தியகம் உள்ளடக்கி இருப்பது தென்மராட்சிக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

உற்பத்தியகத்தின் தோற்றத்துக்கு வழிவகுத்த வூஸ் நிறுவனப் பணிப்பாளர் திருமிகு வே.ஜெயராஜசிங்கம் அவர்களுக்கு எம் இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரியதாகும்.

மின்ஒட்டு, தோல் உற்பத்தி அலகுகளின் பயிலுநர்கள்.

(85937)


## விவசாய பீட விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் 2007/2008 ஆம் கல்வியாண்டு முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகளும், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகளும் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

(201)


## YOGI'S

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)

Cakes And Sugar Craft

Exhibition 2009



யாழ்.பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில் எமது அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி 12.06.2009 முதல் ஆரம்பம்.

யாழ்.அரச அதிபர் திரு. K.கணேஷ் அவர்கள் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இடம்: 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

காலம்: 12.06.2009 மு.ப.10மணி முதல் இரவு 7மணி வரை

*13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை

தொ.பே: 222 2796, 060 221 0077.

நிர்வாக இயக்குநர்






AMT

# A.M.T Transport Service

யாழ்.குடாநாட்டிற்கும் தென்பகுதிக்குமான தரை வழிப்பாதையில் எமது போக்குவரத்துச் சேவையினை **மீண்டும்** ஆரம்பிக்கின்றோம் என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு**

யாழ்.குடாநாட்டிலிருந்து விவசாயப்பொருள்கள், கருவாடு, தெங்கு, பனை உற்பத்திப் பொருள்களை தென்பகுதிக்கு நியாய கட்டணத்தில் கொண்டு செல்லப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ மூன்று தசாப்த காலமாக போக்குவரத்துச் சேவையில் தடம்பதித்த முன்னணி நிறுவனம்.

**கொழும்பு:**
இல.230/232 *Wolfendhal Street, Colombo -13.*
*T.P: 0115365166, 0112451558, 0112451716*

**யாழ்ப்பாணம்:**
*Point pedro Road, Irupalai Junction, Kopay.*
*T.P: 021 222 5784, Fax: 021 2225784.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி சம்பியன்




வலி.வடக்கு, ஜூன் 10

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் ஆக்ரோஷமாக பந்தை எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கி நகர்த்திய வண்ணம் இருந்தார்கள். இதனைத் தடுத்து நிறுத்திய யாழ்ப்பாணக் கல்லூரியும் தனது திறமையை வெளிப்படுத்தி பந்தை எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கி மட்டுப்படுத்திய அளவில் நகர்வை மேற்கொண்டது எனினும் இரு அணிகளும் பல தடவைகள் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களை தவறவிட்டன.

முதல் பாதி ஆட்டம் முடிவடைய ஒரு சில செக்கன்கள் இருக்கும் நிலையில் சென்ஜோன்ஸ் கல்லூரி வீரன் டிலக்சன் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டார்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதினார்கள். யாழ்ப்பாணக்கல்லூரி வீரன் ரஜீவன் தனக்குக் கிடைத்த பந்தை முன் நகர்த்திச் சென்று கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டான்.

இந்த நிலையில் ஆட்டம் 1:1 என்ற கோல்கள் ரீதியில் சமநிலையில் நிறைவு பெற்றது. வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் மேலதிகமாக பத்து நிமிடங்கள் விளையாட நேரம் வழங்கிய போதிலும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

இதனால் இரு அணிகளுக்கும் சமநிலை தவிர்ப்பு அடிகள் வழங்கப்பட்டன.

இதன் போது யாழ்ப்பாணக்கல்லூரி 04:03 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டதில் முதல் தடவையாக களம் இறங்கிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் 02:00 என்ற கோல்கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வெற்றி பெற்று முன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலை அணிகள் தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளன. (04-86)

## ‘சுப்பர்சிக்ஸ்’ பிரிவுக்குத் தெரிவாகிய அணிகள்

வலி.வடக்கு, ஜூன் 10

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தி வந்த லீக் முறையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சுப்பர் சிக்ஸ் பிரிவில் விளையாட மூன்று பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆறு கல்லூரிகளின் விவரங்கள் வருமாறு.

''எ'' பிரிவு - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

''பி'' பிரிவு- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி.

''சி'' பிரிவு- யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. (04-86)

## வடமாகாண கராத்தேப் போட்டிகளில் முன்னிலை பெற்று யாழ்.வீரர்கள் சாதனை

வலி.வடக்கு, ஜூன் 10

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கராத்தேப் போட்டிகளில் யாழ்.மாவட்ட அணி எட்டு பிரிவுகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

திருகோணமலையில் நடைபெற்ற இப் போட்டிகளில் மன்னார், வவுனியா, யாழ்.மாவட்ட அணிகள் கலந்து கொண்டு மோதின.

இந்தப் போட்டிகளில் - 45-50 கிலோ பிரிவினருக்கான போட்டியில் ஆர். இராஜ்குமார், ஆர்.கிருஷ்ணகுமாரும் -

50-55 கிலோ பிரிவினருக்கான போட்டியில் எம்.பொபிசன், என்.கதிரவனும் -

55-60 கிலோ பிரிவினருக்கான போட்டியில் ஜெ.ஜெயகாந், என்.சாந்தரூபனும்-

60-65 கிலோ பிரிவினருக்கான போட்டியில் எம்.வசந்தசேகர், கே.பிரசாத்தும்-

65-70 கிலோ பிரிவினருக்கான போட்டியில் எஸ். ரமணிகன், ரி.ஜீவராசாவும்-

70-75 கிலோ பிரிவினருக்கான போட்டியில் ரி.பிரசன்னாவும் -

75-80 கிலோ பிரிவினருக்கான போட்டியில் ஆர்.குணசீலன், ஆர்.சிவமோகனும் -

80 கிலோவும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் எஸ்.பரம்குமாரும், ஆர்.கணேசமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் இறுதிக்கட்டமாக தேசிய மட்டத்தில் இடம் பெறும் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமையும் குறிப் பிடத்தக்கதாகும். (04- 86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

## பாடசாலை அணிகளுக்கிடையிலான ஆண்களுக்கான தடகளப் போட்டி முடிவு

வலி.வடக்கு, ஜூன் 10

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:

**21வயதுப் பிரிவு**

*100மீற்றர் ஓட்டம்:* ஆ.ரவிக்குமார் (வட.வேலாயுதம் மகா வித்தியா), கு. கிருஸ்ணா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),றொ.ஜெனின் (யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி)

*200 மீற்றர் ஓட்டம்:* ஆ.ரவிக்குமார் (வட வேலாயுதம் மகா வித்தியாலயம்) பொ. மைக்கல் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி) றொ.ஜெனின் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

*400 மீற்றர் ஓட்டம்:* கு.கிருஸ்ணா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), வி.விக்கினராசா(உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), க.பாலகுமார் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

*800மீற்றர் ஓட்டம்:* மோ. தனேஷ் (ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி), சி.ரூபிநாத் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),ம.மயூரன் (வட.சிதம்பராக் கல்லூரி)

*1500 மீற்றர் ஓட்டம்:* ப.பிரதீபன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மோ. தனேஷ் (ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி),கி.ஸ்டாலின்(பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை)

*5000மீற்றர் ஓட்டம்:* மோ. தனேஷ் (ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி), ப.பிரதீபன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி),கி.சத்தியசீலன் (சாவச்சேரி இந்துக்கல்லூரி),

*110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்:* ம.பார்த்தீபன் (தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி),றொ.ஜெனின் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி),சோ.முகுந்தன் (யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

*400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்:* சி.ரூபிநாத்(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), க.சுஜீபன்(இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி), பொ.யூட்கேதீசன் (யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

*நீளம் பாய்தல்:* ம.கோகிலதாஸ் (தெல்லிப்பழை மகா ஜனக்கல்லூரி), மு.தயாரதன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), தே.யூலி டெனிஷ் (ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி)

*உயரம் பாய்தல்:* சி. வல்லவகுமாரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.சாந்தகுமார் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), கு.நிஜீந்திரன் (உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி)

*முப்பாய்ச்சல்:* ந.நிசாந் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), ம.கோகிலதாஸ் (தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி), உ.உதயசீலன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

*குண்டு போடுதல்:* ச. வாகீசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ந.சுதாகரன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), கஜேந்திரன் (அனலைதீவு மகா வித்தியாலயம்)

*தட்டெறிதல்:* ஆ.ரவிக்குமார் (வடவேலாயுதம் மகா வித்தியா), ம.பார்த்தீபன் (தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி), ச.வாகீசன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

*ஈட்டி எறிதல்:* ச.வாகீசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சு.செந்தூரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), ம.பார்த்தீபன் (தெல்லிப்பழை மகா ஜனக்கல்லூரி)

*கோலூன்றிப் பாய்தல்:* கோ.காண்தீபன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), சி.சாந்தகுமார் (தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி), இ.இராஜ்மோகன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

*4 X 100 மீற்றர் அஞ்சலோட்டம்:* சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி.

*4 X 400மீற்றர் ஓட்டம்:* ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி,சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.

(86)



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் [illegible]நரவுடன் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்[illegible] [illegible]டிப் போட்டி இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக் [illegible]வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள் நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 ★ 08 ★ 1947



உதிர்வு 11 ★ 05 ★ 2009

## கதிரவேலு காங்கேசன்

(முன்னாள் உரிமையாளர் இரத்தினம் லைட், கண்ணா லொறி)

சொல்லிலடங்காச் சேவைகள் பல புரிந்து
செல்லிடமெங்கும் புகழ் சேர்த்த செம்மலே!
அன்பும் பண்பும் அரவணைப்பும் செய்து
துன்பங்கள் போக்கிய தூயவரே!
கோவை மண்ணது நிமிர வேண்டி
நிகரில்லாப் பணிகள் நித்தம் புரிந்தவரே!
நீர் சென்று (கண்) நீர் தந்து நினைவிழந்து
நித்தமும் வாடச் செய்ததேனோ!

“கதிரவேல் வாசா”
காளி கோயிலடி, கோப்பாய். குடும்பத்தினர். (86042)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 19 ★ 03 ★ 1948



உதிர்வு 11 ★ 05 ★ 2009

## அமரர் முருகன் சின்னத்துரை

மழை பெய்த பின்பும்
நீர் சொரியும் மரமாய்
எம் இதயத்தில் என்றும்
நீங்காமல் இருப்பாய் நீயப்பா!
புன்னகை பூத்த உன் முகம்
காணாமல் தவிக்கின்றோம்
எங்கிருந்தாலும் ஓடோடி வந்து
எமை அணைத்திடு எம் அப்பா!

கரணவாய். (85942) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 ★ 03 ★ 1924



மறைவு 23 ★ 05 ★ 2008

## திருமதி இலட்சுமிப்பிள்ளை குணரத்தினம் (செல்லம்மா)

திதி: அபரபக்க திருதியை (10.06.2009)

உள்ளத்திலே நல்லவளாய்
ஊர் போற்றும் உத்தமியாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
மனிதருள் மாணிக்கமாய்
புனிதமாய் வாழ்ந்தவளே!
பாசவலை அறுத்து தச்சை விநாயகர் அடி சேர்ந்தனையோ
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம்துயரம்

“சுஜேந்திரபவன்”,
கரவெட்டி மேற்கு.
தொ.பே.: 021 226 4426 மக்கள், மருமக்கள் (85886)

## விற்பனைக்குண்டு

கிழுவம் கதியால்கள் (வெட்கிழுவை) தொகையாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: இ.பாலசுப்பிரமணியம்
சிறுப்பிட்டி மத்தி, சங்கக்கடை ஒழுங்கை
தொ.பே.; 060 221 8373

# நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 10

இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கென காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உதவிகளை வழங்கியுள்ளது.

56ஆயிரத்து 550 ரூபா நிதியையும் 64 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் சமாசம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்திடம் வழங்கியுள்ளது.

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 37 ஆயிரத்து 950 ரூபாவையும், சிவகெளரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 10 ஆயிரம் ரூபாவையும், மருதமலை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 8 ஆயிரத்து 600 ரூபாவையும் பணமாக வழங்கியதோடு, அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 64 ரூபா பெறுமதியான கருவாடு மற்றும் பொருள்களையும் வழங்கியுள்ளது.

(50-224)

# சங்கக் கிளைகளில் பம்பாய் வெங்காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து பம்பாய் வெங்காயத்தை தருவித்துள்ளது.

இந்த பம்பாய் வெங்காயத்தை சங்கக் கிளைகளில் நுகர்வோர் ஒரு கிலோ 100 ரூபா விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

# மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய், ஜூன்10

ஊரெழுவில் அமைந்துள்ள மனித உரிமைகள் நிலையம் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு இடங்களில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொண்டு வருகிறது.

உரும்பிராய், நவக்கிரி, அச்செழு, ஆவரங்கால், குப்பிளான் ஆகிய பகுதிகளில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

இச் செயற்பாட்டில் இப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதில் சிறு பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் பிணக்குகள் ஏற்படாமல் பாதுகாக்கும் அறிவையும் இக்கருத்தரங்குகள் மூலம் மக்கள் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் தொடர்ந்தும் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(203-72)

## ஏ.ரி.எம் பணப்பரிமாற்ற சேவை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் தன்னியக்க பணப் பரிவர்த்தனை சேவை (ATM) அங்குரார்ப்பண நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம், பெறவுள்ளது.

நிகழ்வில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் தன்னியக்கப் பணப்பரிவர்த்தனை (ATM) சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# கிராம அபிவிருத்தி சங்க துக்கு அடிக்கல்

வடமராட்சி, ஜூன் 10

பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி கட்டடம் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 17 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-236)

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 ★ 10 ★ 1985



இறப்பு 10 ★ 06 ★ 2001

## அமரர் ஸ்ரீநிதி கபில்

உள்ளத்தை உடைத்தெடுத்து
உடம்பிலே உள்ளதை யெல்லாம்
உருகி வடித்து
உருவத்தையே உருவாக்கி
உருவம் கொடுப்போம்
உன் பிறப்பை மீண்டும் பெறுவதற்கு

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (85939) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 * 06 * 1927



மறைவு 11 * 05 * 2009

## அமரர் சுப்பிரமணியம் வள்ளியம்மை

குடும்பத்தின் ஒளி விளக்காக - எமை
தாங்கிநின்ற ஆலம்விழுதாக இருந்து
ஏற்றம் தந்தாய் உயர்வு தந்தாய் - எம் தாய்
கலங்கிய இதயத்தோடு நின் ஆத்மா சாந்தி
அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மந்திரிமடம், வதிரி,
கரவெட்டி. குடும்பத்தினர். (சி/558901)

# நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு


மலர்வு 05 ✱ 04 ✱ 1924
உதிர்வு 23 ✱ 05 ✱ 2008



## திருமதி கணபதிப்பிள்ளை பொன்னம்மா

7ஆம் ஆண்டு

மலர்வு 30 ✱ 12 ✱ 1930
உதிர்வு 14 ✱ 05 ✱ 2002



## அமரர் தம்பையா கணபதிப்பிள்ளை

(புலோலி ப.நோ.கூ.சங்க ளிபொருள் நிலைய ஓய்வு பெற்ற முகாமையாளர்)

திதி: திருதியை

எமது குடும்ப விளக்குகளின் நினைவுத் தினமான இன்று (10.06.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

தகவல்:
தாயி இல்லம், மாவில் வீதி, புற்றளை. (85928) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்குச் சமவுரிமைகள் கிடைக்க இந்திய அரசு உடன் தலையிட வேண்டும்

## ஜெயலலிதா வலியுறுத்து



சென்னை, ஜூன் 10

இலங்கைத் தமிழர்களுக்கு சமவுரிமை கிடைக்கவும், மறுவாழ்வு மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்திய அரசு தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்ற பழமொழிக்கு ஏற்ப இலங்கையில் போர் நின்று விட்டாலும் தமிழர்களின் அவலநிலை தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

இலங்கை முகாம்களில் வாழும் இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு அந்நாட்டு சட்டப்படி நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்றும், இவ்வாறு வெளிப்படையாகச் சொல்வதால் தான் தண்டிக்கப்படலாம் என்றும் இலங்கைத் தலைமை நீதிபதி கவலையுடன் கூறியுள்ளார் என பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தச் சூழ்நிலையில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் விவகார ஆணையர், இலங்கையின் தமிழர் பகுதிகளில் மனித உரிமைகள் மீறப்பட்டமை குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார். இதற்குப் பிரான்ஸ், ஜப்பான், தென்கொரியா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால் இந்தியா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை அரசின் மனித உரிமை மீறல் பிரச்சினை ஐ.நா. சபையில் ஏற்கப்படவில்லை. இது மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது.

தமிழின தலைவர் என்று தன்னைத்தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் முதலமைச்சர் கருணாநிதிக்கு தமிழர்களைப் பற்றிய கவலை அறவே கிடையாது. தன் மக்களுக்காக வளமான இலாகாக்களை போராடிப் பெறும் அளவுக்கு தமிழ் மக்களுக்காகப் போராடும் மனம் கருணாநிதிக்குக் கிடையாது.

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து இலங்கையில் அதிகாரப் பகிர்வு குறித்து பேசினார் என பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

ஆனால், இளையாங்குடி தொகுதி இடைத் தேர்தலில் தன் மகனை வேட்பாளராக நிறுத்துவது குறித்து முதலமைச்சரிடம் சிதம்பரம் பேசினார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அமைத்துக் கொடுக்கவும், சிங்கள மொழி பேசும் மக்களுக்கு இணையாக சமவுரிமையுடன் தமிழ் மக்கள் வாழவும், அவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் கேட்டு கொள்கிறேன் - என்றுள்ளது.

# 2 படகுகளுடன் 9 தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையால் கைது

இராமேஸ்வரம், ஜூன் 10

இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற 9 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருப்பதால் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் நேற்றுமுன்தினம் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் அனைவரும் நேற்று கரை திரும்ப வேண்டும். ஆனால், அவர்களில் 9 பேர் கரை திரும்பவில்லை.

அவர்கள் 9 பேரையும் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றிருக்கின்றனர் எனவும், அவர்கள் சென்ற 2 படகுகளைப் பறிமுதல் செய்திருக்கின்றனர் எனவும் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து இராமேஸ்வரம் மீனவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழீழம் கோருவதில் என்ன தவறு?

## வைகோ கேள்வி



கரூர், ஜூன் 10

பலஸ்தீனத்தில் தனி நாடு கோரும்போது, இலங்கையில் தமிழீழம் கோருவதில் என்ன தவறு உள்ளது - என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், இலங்கையின் வடக்கிலும், தமிழர் பூர்வீகப் பகுதிகளிலும் சிங்களவர் குடியமர்த்தப்படுகின்றனர் - என்றும் அவர் கூறினார்.

கரூரில் நேற்றுமுன்தினம் நடந்த மாவட்ட ம.தி.மு.க. செயல்வீரர் கூட்டத்தில் பேசிய போதே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நம் வாழ்நாளில், வரலாற்றில் இல்லாத அளவு தமிழினத்துக்கு இழிவும், அழிவும் ஏற்பட்டுள்ளன. உலகில் நாதியற்ற நிலையில் தமிழினம் உள்ளது. இலங்கையின் வடக்கிலும், தமிழர் பூர்வீகப் பகுதிகளிலும் சிங்களவர் குடியமர்த்தப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழர் துயரத்துக்கு சோனியாவை குற்றம் சொல்லமாட்டேன். கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கத்தில் போட்ட திட்டத்தில், கூட்டணி சேர முன்னர் தயங்கிய அதே தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில், இலங்கைக்கு இந்தியாவில் இருந்து ஆயுதம் விநியோகம் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு முழுக் காரணம் கருணாநிதி.

டில்லியுடன் நமக்கு உள்ள உறவு 200 ஆண்டு காலம் பழைமையானது. ஆனால், கரிகாலன் காலம் முன்னரே இலங்கைத் தமிழர்களுடன் நமக்குள்ள உறவு தொப்புள் கொடி உறவு. பலஸ்தீனத்தில் தனி நாடு கோரும் போது, இலங்கையில் தமிழீழம் கோருவதில் என்ன தவறு உள்ளது - என்றார்.

# கச்சதீவை இராணுவத் தளமாக்க முயற்சித்து வருகிறது இலங்கை!

## டி.ராஜா எச்சரிக்கை



டில்லி, ஜூன் 10

இலங்கையின் இராணுவத் தளமாக கச்சதீவு மாறும் அபாயம் உள்ளது - என்று மாநிலங்களவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் உறுப்பினர் டி.ராஜா திங்கட்கிழமை எச்சரிக்கை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

விவசாயத் துறை தொடர்பான சீர்திருத்தங்களை மறு ஆய்வு செய்யவேண்டும். நாட்டில் உள்ள 2 மடங்கு விவசாய நிலங்களுக்கு உரிய பாசன வசதியை அளித்தால் சர்வதேச அளவில் உணவு உற்பத்தியில் இந்தியா முன்னிலை பெறும்.

கச்சதீவு ஒப்பந்த விவகாரம் தொடர்பாக மீண்டும் இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்தி தீர்வு காணவேண்டும். கச்சதீவை இராணுவத் தளமாக மாற்ற இலங்கை அரசு முயற்சித்து வருகிறது - என்று எச்சரிக்கை விடுத்தார்.

# இலங்கையில் தமிழர் துன்பப்படுவதை பார்க்கும்போது ரத்தம் கொதிக்கின்றது

## சுஷ்மா ஸ்வராஜ் மக்களவையில் பேச்சு



டில்லி, ஜூன் 10

இலங்கைத் தமிழர்களின் நிலை வேதனையளிப்பதாக உள்ளது. அவர்களது ரத்தமும், நமது ரத்தமும் ஒன்றுதான். தமிழர்கள் துன்பப்படுவதைப் பார்க்கும்போது ரத்தம் கொதிக்கிறது - என்று பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மக்களவை எதிர்க்கட்சி துணைத் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் பேசினார்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் 'நன்னெறி'யில் இருந்து ஒரு பாடலை மேற்கோள் காட்டி அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

மனித உடலில் ஏதாவது ஓர் அங்கத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால் கண்கள் கண்ணீர் விடுகின்றன. இலங்கையில் வசிப்பவர்கள் இந்தியாவிலிருந்து தூரத்தில் இருக்கலாம். ஆனால், அவர்களது ரத்தமும், நமது ரத்தமும் ஒன்றுதான்.

தமிழர்கள் துன்பப்படுவதைப் பார்க்கும் போது ரத்தம் கொதிக்கிறது. பெண்களும், சிறார்களும் பாதிக்கப்படுவது வேதனை அளிப்பதாக உள்ளது.

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் தாக்கப்படுவது தொடர்கிறது. உண்மை நிலையைக் கண்டறிய இந்தியாவிலிருந்து எம்.பி.க்கள் குழுவை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழர் படுகொலை குறித்து இந்தியா வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்

## நாடாளுமன்றில் திருமா எம்.பி. வலியுறுத்து



சென்னை, ஜூன் 10

இலங்கைத் தமிழர் மீதான இனப்படுகொலை பற்றி இந்தியா வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இலங்கைத் தமிழர் சிக்கலில் இந்திய அரசின் பங்களிப்பு என்ன?, இலங்கை அரசுக்கு இந்திய அரசு என்ன வகையான ஆதரவை வழங்கியது போன்ற விடயங்கள் குறித்து அந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்.

எம்.பியாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட பின் முதல் முறையாக நாடாளுமன்றத்தில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது கன்னிப்பேச்சு வருமாறு -

குடியரசுத் தலைவர் உரையில், இலங்கையில் நடக்கும் இனப்படுகொலை பற்றியும், சேது சமுத்திரத்திட்டம், தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இலங்கைத் தமிழர் மீதான இனப்படுகொலை பற்றி இந்தியா வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இலங்கைத் தமிழர் சிக்கலில் இந்திய அரசின் பங்களிப்பு என்ன?, இலங்கை அரசுக்கு இந்திய அரசு என்ன வகையான ஆதரவை வழங்கியது போன்ற விடயங்கள் குறித்து இந்திய அரசு வெள்ளை அறிக்கையில்குறிப்பிட வேண்டும்.

அதைப்போலவே, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கான தனி அமைச்சகம் உருவாக்க வேண்டும். மேலும் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான தலித் விவகாரங்களுக்கான அமைச்சர்கள் குழுவின் பரிந்துரைகளை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். அனைவருக்கும் கல்வியை இலவசமாக வழங்க வேண்டும்.

எமது கட்சியும் தோழமைக்கட்சியான தி.மு.க.வும், ஈழத் தமிழர்கள் சிக்கல் குறித்து மிகுந்த கவலை கொண்டுள்ளன. இந்தியா, தமிழ்ச் சமூகத்திற்கு துரோகம் இழைத்து விட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்தியா, தமிழர்களுக்கு எதிரான தனது போக்கை மாற்றிக்கொண்டு தமிழ்ச் சொந்தங்களை பாதுகாக்க வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழருக்கு அரசியல் தீர்வு: இந்தியாவுக்கு பெரும் பொறுப்பு

## கனிமொழி தெரிவிப்பு

சென்னை, ஜூன் 10

இலங்கையில் தமிழருக்கு நிலையான அரசியல் தீர்வு காண்பதில் மத்திய அரசுக்கு பெரும் பொறுப்புள்ளது - என்று கனிமொழிஎம்.பி. பேசினார்.

டில்லி மேல்சபையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களின் பாடுகள் பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இலங்கையில் போர் முடிந்துவிட்டது. மக்களின் கஷ்டங்கள் தீரவில்லை. ஏனெனில், அங்கு தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக வாழும் தமிழ் மக்களுக்கு வாழும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. அவர்களை சமகுடிமக்களாகக் கருதப்படும் உரிமை மறுக்கப்படுகிறது.

எனவே, இலங்கையில் தற்போது போர் முடிந்துள்ள நிலையில் இந்திய அரசுக்கு பெரும் பங்கு உண்டு. அந்த மக்களை அவர்கள் இல்லங்களில் குடி அமர்த்த செய்வது, பரம்பரை வீடுகளில் வாழ வைப்பது, நிலையான அரசியல் தீர்வு காண்பதில் மத்திய அரசுக்கு பெரும் பொறுப்பு உள்ளது - என்றார்.

# புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகின்ற இலங்கையரின் விஸாவை ரத்துச் செய்க!

## சுப்பிரமணியசுவாமி கோரிக்கை



சென்னை, ஜூன் 10

இந்தியாவிலிருந்து கொண்டு இலங்கை அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்துகொண்டிருக்கும் இலங்கையர்களின் விஸாவை மத்திய அரசு உடனே ரத்து செய்ய வேண்டும் - என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இந்தியாவில் இருந்து கொண்டு இலங்கைக்கு எதிராக பிரசாரம் செய்பவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றனர். இந்தியாவுடன் நல்லுறவு கொண்டிருக்கும் இலங்கை ஒரு ஜனநாயக நாடு. எனவே இந்தியாவில் இருந்து கொண்டு இலங்கைக்கு எதிராகப் பேசுவதற்கு அந்நாட்டினருக்கு உரிமை கிடையாது. அவர்கள் வேண்டுமானால் இலங்கையிலிருந்து அப்படிப் பேசிக் கொள்ளலாம்.

வெளிநாட்டில் இருந்து கொண்டு இந்தியாவைப் பற்றி தரக்குறைவாக இந்தியர்கள் பேசினால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. இந்தியாவின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கு இந்தியா பலியாகிவிடக்கூடாது - என்றுள்ளது.

# 200 அடி பள்ளத்தில் விழுந்த இளைஞர் 2 நாள்களாகப் புல்லைத் தின்ற பரிதாபம்



திருப்பரங்குன்றம், ஜூன் 10

சிவகங்கை காந்தி ரோட்டைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (வயது30). இவர் மதுரை, திருப்பரங்குன்றத்தில் ஹோட்டல் ஒன்றில் வேலை பார்த்து வந்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு இவர், திருப்பரங்குன்றம் மலைக்குச் சென்று அங்குள்ள காசிவிசுவநாதர் கோயில் மற்றும் தர்காவை சுற்றிப் பார்த்தார். பின்னர், மலையைவிட்டு இறங்க முயன்ற செந்தில்குமார், 200 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்தார். அவரது கை, கால்களில் முறிவு ஏற்பட்டது. தன்னைக் காப்பாற்றுமாறு செந்தில்குமார் அலறிய சத்தம் வெளியே யாருக்கும் கேட்கவில்லை.

கடந்த இரண்டு நாள்களாக உயிருக்கு போராடிய நிலையில் சாப்பிட எதுவும் கிடைக்காத நிலையில், அங்கிருந்த புல்லையும், இலைகளையும் தின்று அவர் பசியாறினார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலையில் தர்காவுக்கு வந்த சிலர் பள்ளத்தில் கிடந்த செந்தில்குமாரின் முனகல் சத்தம் கேட்டு அவரை மீட்டனர். அவரை பொலிஸார் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் குமாரவேலு தனபாலசிங்கம்

தோற்றம்
12★12★1944

மறைவு
11★05★2009

11.05.2009 அன்று சிவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் அன்னார் நோயுற்று இருந்தவேளை அவருக்கு சிகிச்சை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை பணியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்று (10.06.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பொன்னையா



7ஆம் வட்டாரம், குமுழமுனை முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா நேற்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் உதயகுமார் (கனடா), உதயராசா (ஆசிரியர், பெரியபுலம் மகா வித்தியாலயம்), உதயச்சந்திரன் (வவுனியா), உதயறஞ்சினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்சில்டா கௌரி (கனடா), சுபாஜினி (சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழ கம்), வனிதமலர் (வவுனியா), காந்தரூபன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் நிவேதா (கனடா), கவிநிலவன், பிரணவிகா (யாழ்ப்பாணம்), கவிந்தன், பிறையாளன் (வவுனியா), சுலக்சன், ஜதுர்சிகா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.06.2009) புதன்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.உதயராசா (மகன்)
ஆசிரியர் - பெரியபுலம் மகா வித்தியாலயம்

இல.48,
ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். (86101)

### சிங்கராசா சிறீஸ்கந்தராசா (ரவி ஆசாரி)

சந்திரபுரம், மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் 262/18, அளுக்குவத்த றோட், கொழும்பு 15ஐ வதிவிடமாகவும் கொண்ட சிங்கராசா சிறீஸ்கந்தராசா (08.06.2009) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - இரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும் விக்கினேஸ்வரனின் (ஈசன்) பாசமிகு சகோதரனும் சோபனாவின் அன்புத் தந்தையும் நிர்மலாவின் மைத்துனரும் கஜீபன், சங்கவி ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2009) புதன்கிழமை கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.விக்கினேஸ்வரன்
(ஈசன் - சகோதரன்).

பிரதேச சபை முன் ஒழுங்கை,
மானிப்பாய். (86060)

### சண்முகலிங்கம் மகேஸ்வரி



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடத்தை வாழ்விடமாகவும் கொண்டு தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமான அமரர் சண்முகலிங்கத்தின் அன்பு மனைவி மகேஸ்வரி ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற விஸ்வப் பிரம்மஸ்ரீ கணேசமூர்த்தி மற்றும் பாலசுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை), கேதீஸ்வரன் (ஜேர்மனி), அன்னமுத்து (புஸ்பராணி - இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் ஜெயராணி, மங்களபதி, விஜயலட்சுமி, கோணேஸ்வரி (கனடா) ஆகியோரின் உடன்பிறந்த சகோதரியும் நேசமலர் (ஜேர்மனி), கோணேஸ்வரன் (ஜேர்மனி), புவனேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் மகேஸ்வரனின் (ஜேர்மனி) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2009) புதன்கிழமை ஜேர்மனி நேரம் ஒரு மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலாபூஷணம் க.நா.கணபதிப்பிள்ளை
(சின்னமணி).

கலை அகம்,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (86061)

## கிழக்குப் பல்கலை.மாணவருக்கு பயண ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன்10

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 51 மாணவர்களுக்கான பிரயாண ஒழுங்கு எதிர்வரும் சனிக்கிழமை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

எனவே, தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நாளை வியாழக்கிழமை 12 மணிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் தமது பெயர் விவரங்களின் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (1)

## தாக்குதல் சம்பவத்தில் ஒருவருக்கு விளக்கமறியல்

வலி.வடக்கு, ஜூன் 10

உலக்கையால் அடித்து தலையில் காயமுண்டாக்கியதாகக் கூறப்படும் ஒருவர் 2 வாரகாலம் விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

இக்கிராளை, கந்தரோடை மேற்கிலுள்ள க.அஜித் என்பவரே தலையில் உலக்கையால் தாக்கப்பட்டு காயத்துக்குள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபரை உலக்கையால் தாக்கி காயப்படுத்தியவர் என்ற சந்தேகத்தில் கைது செய்த நபர் ஒருவரை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (01-86)

## திருட்டுப்போன சைக்கிள்கள் மீட்பு

வலி.வடக்கு, ஜூன் 10

சுன்னாகம் பொலிஸாரினால் சைக்கிள் திருடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆண்கள், பெண்களுக்குச் சொந்தமான ஆறு சைக்கிள்கள் மீட்கப்பட்டன.

பின்வரும் இலக்கங்களுடைய சைக்கிள்கள் உரிமையாளர்களை தம்முடன் தொடர்புகொண்டு சைக்கிள்களைப் பெறும்படி சுன்னாகம் பொலிஸார் கேட்டுள்ளனர். சைக்கிள்களின் இலக்கங்கள் வருமாறு:

57164549, 69350975, ECC 41566, 69533058 , B 778535 மற்றும் இலக்கம் 729 (முழுமையான இலக்கம் தெரியவில்லை) (1-86)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு போசாக்குணவு

நல்லூர், ஜூன் 10

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான சத்துணவுகள் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் யாழ்.மாநகராட்சி மன்றத்தில் வைத்து வழங்கப்படும்.

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்படும் போசாக்கு உணவுகளை முன்பள்ளி ஆசிரியர்கள் தவறாமல் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (1-111)


### பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் வீட்டுப் பணிப் பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 0779182815


## பனங்கைப்பணிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

பனை அபிவிருத்திச் சபையால் 01.07.2009இல் கண்டி வீதி, தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில் பனங்கைப்பணிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பயில விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 25.06.2009ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

05.06.2009 (சி/558926)

## விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA - SRILANKA

### மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி புதிய அனுமதி - 2009

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் கீழ் இயங்கும் கடல்வள அபிவிருத்தி நிலையம் தமிழ்மொழி மூலம் நடத்தும் இரண்டு ஆண்டுகால மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகைமையும் தெரிவும்

* பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய எவரும் விண்ணப்பிக்கலாம்.
* உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்காணல் மூலமும் திறமை அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

கட்டண விவரம்:
பதிவுக் கட்டணம் ரூபா 1,000
கற்கைநெறிக் கட்டணம் ரூபா 30, 000
மீளப்பெறக்கூடிய வைப்பு ரூபா 1,000

கற்கை நெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் செலுத்தப்படலாம். பதிவு மேற்கொள்ளும் பொழுது இருபத்திரண்டாயிரம் ரூபாவும், இரண்டாம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாக செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 100/- கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 03.07.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்
09.06.2009 (சி/558930)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய
கணித ஆசான் பொ.உதயராசா
அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்தம்பி பொன்னையா

அவர்கள் 09.06.2009 அன்று வவுனியாவில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்கிறோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Microsoft Office | 3 Months | | 2500/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 15000/= | 3000/= |
| Diploma in Web page Designing | 3 Months | 15750/= | 3150/= |
| Diploma in Graphic Publishing | 4 Months | 15750/= | 3150/= |
| Diploma in Hardware Engineering | 3 Months | 15000/= | 3000/= |
| Diploma in AutoCAD | 3 Months | 15000/= | 3000/= |
| Accounting Package (Quick Book) | 3 Months | 15750/= | 3150/= |
| Diploma in Computer Science | 4 Months | 15750/= | 3150/= |
| Honors Diploma in Computer Science | 4 Months | 18000/= | 3600/= |

50% Off
ADVANCE COURSES
Diploma in Video Editing ~~8500~~ 4250/=
Diploma in Multimedia ~~7500~~ 3750/=

Batch I : 11/06/2009 - 9AM
Batch II : 12/06/2009 - 9AM
Batch III : 13/06/2009 - 9AM / 2PM
Batch IV : 14/06/2009 - 9AM / 2PM
Batch V : 17/06/2009 - 9AM

80% Off


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இடம்பெயர்ந்தோர் நலன்கருதி சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் உலக சுகாதார நிறுவனத்தின் நிதியில் இருந்து அபிவிருத்திக்கும் நிவாரணத்துக்குமான (ஐ.ஆர்.டி.) சர்வதேச நிறுவனத்தின் பங்களிப்பில் அமைக்கப்பட்ட விடுதி திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

ஐ.ஆர்.டி. நிறுவனத்தின் பிரதிநிதி வைத்திய கலாநிதி நச்சினார்க் கினியன் மங்கள விளக்கேற்றுகிறார். எம்.எச்.எம்.முனாஸ் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி வைத்திய கலாநிதி என்.சிவராசா யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரன் ஆகியோரும் முதலாவது படத்தில் காணப்படுகின்றனர்.

புதிய நோயாளர் விடுதியை உலக சுகாதார நிறுவனத்தின் தேசிய ஆலோசகர் வைத்திய கலாநிதி ஹரிஸ் சந்திர யக்கண்டவல நாடாவை வெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், தாதியர் மற்றும் நோயாளர்கள், பொதுமக்கள் மூன்றாவது படத்தில் உள்ளனர். (படங்கள்: அருணன், தென்னவன்)

# இடம்பெயர்ந்தோர் நலனுக்கென அமைக்கப்பட்ட புதிய விடுதி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்றுத் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜுன் 10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூறு அடி நீளமான நோயாளர் விடுதி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சம்பிரதாய பூர்வ மாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ்.தயாளன் தலைமையில் இடம்பெற்றது.

முதலில் மங்களவிளக்கினை பிரதம அதிதியான உலக சுகாதார ஸ்தாபனத்தின் தேசிய ஆலோசகர், வைத்திய கலாநிதி ஹரிஸ்சந்திர யக்கண்டாவல, அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவனத்தின் பதில் தேசிய பணிப்பாளர் எம்.எச்.எம்.முனாஸ், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன், வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

புதிய கட்டடத் தொகுதியை உலக சுகாதார ஸ்தாபனத்தின் தேசிய ஆலோசகர் வைத்திய கலாநிதி ஹரிஸ் சந்திர யக்கண்டவல நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

கட்டடத்தின் நினைவுக்கல்லினை அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவனத்தின் பதில் தேசியப் பணிப்பாளர் எம்.எச்.எம். முனாஸ் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர். எஸ். கேதீஸ்வரன், ஓய்வு பெற்ற யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் கே.கேதீஸ்வரன், உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி என். சிவராசா, அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவனத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தேசிய ஆலோசகர் வைத்திய கலாநிதி ஹரிஸ்சந்திர யக்கண்டவல, அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவனத்தின் பதில் தேசியப் பணிப்பாளர் எம்.எச்.எம். முனாஸ் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை டாக்டர் க.அம்பிகைபாகன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி இ.பரமேஸ்வரன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், வைத்தியசாலையின் தாதியர்கள், ஊழியர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நோயாளர் விடுதிக்கு தேவையான கட்டில்கள், மெத்தைகள், அலுமாரிகள், இதயத் துடிப்புக் கருவி(தெலஸ் கோப்), மருந்துவகைகள், தலையணைகள் உள்ளிட்ட அனைத்துப்பொருள்களும் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை இடம் பெயர்ந்தோர் நலன் புரி முகாமில் தங்கியுள்ள பொதுமக்கள் மற்றும் நோயாளரின் நடமாடும் வைத்திய சேவைப் பராமரிப்புக்காக (I.R.D) நிறுவனப் பிரதிநிதிகளால் அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவனப்பிரதிநிதி எம்.எச்.எம்.முனாஸினால் 1½ லட்சம் ரூபா காசோலை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் அதிகாரிகள் வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டனர். நோயினால் பிடிக்கப்பட்டு சிகிச்சை பெறுவரும் இடம்பெயர்ந்தவர்களையும் அவர்கள் சிகிச்சை பெற்றுவரும் விடுதிகளையும் பார்வையிட்டனர். (1-131-207)

# இணைந்த வடக்கு-கிழக்கில் தமிழருக்கு அதிகாரப் பகிர்வு; வழங்க அரசு முன்வந்தால் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிக்கும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சபையில் தகவல்



கொழும்பு, ஜூன் 10

இணைந்த வடக்கு கிழக்கிற்குள் தமி ழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்க அரசு இதயசுத்தியுடன் முன் வந்தால் அந்த முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தரப்பில் நேற்று நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. சிவசக்தி ஆனந்தனே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தெற்கில் பால்சோறு சமைத்து யுத்த வெற்றியைக்கொண்டாடிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அகதி முகாம்களில் சுமார் 3 இலட்சம் மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

### பல சடலங்கள் ஒரே குழியில் புதைக்கப்படுகின்றன

அந்த முகாம்களில் தினமும் 15 முதல் 20 பேர் வரை மரணிக்கின்றனர். அவர்களின் உடல்கள் செட்டிக்குளம் வைத்திய சாலையில் வைக்கப்படுகின்றன. 50 அல்லது 100 சடலங்கள் சேர்ந்ததும் அவை ஆடு, மாடுகள் போல் ஒரு குழியில் போட்டு புதைக்கப்படுகின்றன. உறவினர்கள் இறுதிக்கிரியை நிறைவேற்றுவதற்கும் இடமளிக்கப்படுவதில்லை.

அந்த முகாம்களில் 5 வயது நிரம்பிய 10 ஆயிரம் சிறுவர்கள் போசாக்கின்றி காணப்படுகின்றனர். இந்த நிலைமை தொடர இடமளிக்கக் கூடாது.

தமிழர்களின் உரிமைக்காக 30 வருடங்கள் அஹிம்சைப் போராட்டம் நடத்தப்பட்டது 30 வருடங்கள் ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்டது.

### தீர்வுக்கான தேவை அதிகரித்துள்ளது

ஆனால், பயங்கரவாதிகள் முற்றாக ஒழிக்கப்பட்டதன் பிறகு தான் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று இந்த அரசு கூறியது.

இப்போது அரசியல் தீர்வுக்கான தேவைகள் அதிகரித்துள்ளன. அரசியல் தீர்வொன்றை வழங்கும் மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சிக்கு சிங்கள மக்கள் ஆதரவு தருவார்கள். தமிழர்களுக்கும் ஆதரவு தருவர்.

பிரபாகரனையும் புலிகளையும் பற்றி இனிப் பேசிப் பயனில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் தீர்வை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இணைந்த வடக்கு கிழக்கிற்குள் அதிகாரப்பகிர்வை வழங்க அரசு முன்வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு முழு ஆதரவு வழங்கும் - என்றார். (அ-சி)

# வடக்கு, கிழக்கில் உள்ள ஆயுதங்களைக் களையுங்கள்; சிங்கள மக்கள் விற்ற காணிகளை அரசு கையேற்க வேண்டும்

## நாடாளுமன்றத்தில் ஹெலஉறுமய வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 10

வடக்கு கிழக்கைச் சேர்ந்த குழுக்களுக்கு தற்பாதுகாப்புக்காக அரசால் வழங்கப்பட்ட ஆயுதங்களை அரசு இப்போது திரும்பப் பெறவேண்டும் என்றும் புலிகளின் பகுதிகளில் சிங்களவர்களால் விற்கப்பட்ட காணிகளின் உரிமைகள் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தை வருமாறு:-

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்த சிங்கள மக்கள் அச்சம் காரணமாக அவர்களின் காணியை விற்றுவிட்டுப் போய்விட்டனர். இப்போது அந்த நிலங்களின் உரிமைகளை இரத்துச் செய்து அந்த நிலங்களை இலங்கை அரசு கையேற்க வேண்டும்.

யுத்த காலத்தின்போது தற்பாதுகாப்புக்காக வடக்கு கிழக்கில் சில அரசியல் கட்சிகளுக்கும், சில குழுக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அவற்றை அரசு இப்போது மீளப்பெற வேண்டும்.

எமது கட்சியான ஜாதிக ஹெல உறுமய பயங்கரவாதத்தையும், மதப் பிரசாரங்களையும் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. அந்தவகையில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைக்கு, நாம் முழு அளவில் உதவி செய்துள்ளோம்.

தற்போது மதப்பிரசாரங்களுக்கு எதிராக நாம் போராட வேண்டியுள்ளது வடக்கில் பல இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு தேவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. வவுனியா அகதிமுகாம்களில் உள்ள இந்துக்கள் மதமாற்றப் படுகின்றனர். இவற்றுக்கு எதிராக நாம் போராட வேண்டும் - என்றார்.

# அரச எம்.பிக்களும் அமைச்சர்களும் கிஷோர் எம்.பிக்கு வாழ்த்து மழை

## அவசரகாலச் சட்டத்தை எதிர்க்காதமைக்காக!

கொழும்பு, ஜூன் 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நேற்று நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தபோதிலும் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவில்லை.

நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெற்றபோது சபையில் இருந்த கூட்டமைப்பு எம்.பிக்கள் எட்டுப்பேரில் ஏழு பேர் அதனை எதிர்த்து வாக்களித்தனர். ஆனால், கிஷோர் எம்.பி. மட்டும் வாக்களி[illegible]யே அமர்ந்திரு[illegible]

([illegible] பார்க்க)

# மரண அறிவித்தல்

## பொன்னையா அற்புதராசா (குட்டி ராசா)

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அற்புதராசா நேற்று(09.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, மகேஸ்வரி மற்றும் அமிர்தமலர், இராஜேஸ்வரி, தர்மலிங்கம், துரைராஜா, துதிமலர், விக்னேஸ்வரன், இந்திரதாஸ்(ஜேர்மனி),காசிலிங்கம் (காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.06.2009)புதன் கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

'மகேஸ்வரம்',
உரும்பிராய் சந்தி,
மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.
தொ.பே. : 0602218700

தகவல்:
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# இலங்கைத் தமிழர்நிலை குறித்து ஆராய்வதற்கு அனைத்துக்கட்சிக் கூட்டம் நடத்த வலியுறுத்து

## இந்திய ராஜ்சபையில் கவன ஈர்ப்பு

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை இந்திய மாநிலங்கள் அவையில் (ராஜ சபையில்) நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கடும் கவலை வெளியிட்டனர். இவ்விவகாரம் தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டமொன்றைக் கூட்டுமாறு அவர்கள் வலியுறுத்தினர்.

பாரதிய ஜனதாக்கட்சியின் வெங்கையா நாயுடு முதலில் இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து மாநிலங்கள் சபையின் கவனத்தை ஈர்த்தார்.

இலங்கையிலிருந்து வரும் தகவல்கள் பயங்கரமானவையாக உள்ளன. அங்கு நடைபெறுவது இனப்படுகொலையைத் தவிர வேறொன்றுமில்லையென அவர் தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் போதியளவு நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனக் குறிப்பிட்ட அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக்கட்சிக்கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்றார்.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க., இந்திய மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்களும் அனைத்துக் கட்சி கூட்டமொன்றைக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கைத் தமிழர்களின் நலன்கள் குறித்து இந்தியாவிற்குத் தார்மீகக் கடப்பாடு உள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான பி.ஜே.குரியன், சந்தோஷ் பக்ரோபியா போன்றவர்களும் இந்த வேண்டுகோளுக்கு ஆதரவைத் தெரிவித்ததுடன் இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் தமிழர்களின் நிலை குறித்து பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும் - என்று வலியுறுத்தினர். (அ-சி)

# சகலதுறையிலும் அசத்தியது பாகிஸ்தான்; சுப்பர் - 8க்கு முன்னேறியது

லண்டன், ஜூன் 10

சகல துறையிலும் பிரகாசித்த பாகிஸ்தான் 82 ஓட்டங்களால் நெதர்லாந்தை கதி கலங்கச் செய்து அசத்தல் வெற்றி பெற்று சுப்பர் - 8 க்கு தெரிவானது.

ஐ.சி.சியின் 2 ஆவது ருவென்ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெற் சுற்றின் 9 ஆவது ஆட்டத்தில் குழு பி அணியில் பாகிஸ்தானும், நெதர்லாந்தும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.

அதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய சல்மான் பட், கம்ரன் அக்மல் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர்.

13 பந்துகளில் 1 சிக்ஸர் 2 பௌண்டரிகள் அடங்கலாக 18 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டியூஸ்சற்றின் பந்து வீச்சில் போறனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் பட்.

இவரைத் தொடர்ந்து சீலாரின் பந்து வீச்சில் சீஸர்லிடம் பிடிகொடுத்து அக்மலும் 30பந்துகளில் 2 சிக்ஸர்கள் 3 பௌண்டரிகள் உட்பட 41 ஓட்டங் களைப் பெற்று வெளியேறினார். இவர்களைத் தொடர்ந்து மலிக் 28 பந்துகளில் 2 பௌண்டரிகள் உட்பட 30ஓட்டங்களைப் பெற்று போறனின் பந்துவீச்சில் சீலாரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய யூனுஸ்கான் 20பந்துகளில் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சீலாரின் பந்து வீச்சில் டி குறுத்திடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மிஸ்பா உல் - ஹக் 20பந்துகளில் 3 பௌண்டரிகள் உட்பட 31 ஓட்டங்களைப்பெற்று ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

நெதர்லாந்து அணி சார்பாக பந்து வீசிய சீலார் 2 விக்கெட்டுக்களையும் நான்னஸ், டியூஸ்சற், போறன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி பாகிஸ்தானின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியதாயிற்று. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக றீகேர்சும், கேர்விசும் களமிறங்கினர். றீகேர்ஸ் முதலாவது ஓவரிலேயே 3 பௌண்டரிகளுடன் 13 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மொகமட் ஆமரின் பந்து வீச்சில் தன்வீரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடர்ந்து கேர்விசி 29 பந்துகளில் ஒரு பௌண்டரி உட்பட 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அஜ்மலின் பந்து வீச்சில் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர்களைத் தவிர மற்றைய அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இறுதிவரை பாகிஸ்தான் அணியின் எதிர்ப்பைத் தாக்குப் பிடிக்க முடியாமல் நெதர்லாந்து அணி 17.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்து வீசிய அப்ரிடி 4 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். அஜ்மல் 3 விக்கெட்டுக்களையும், ஆமர், உமர்குல்,மலிக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (7)

## மட்டக்களப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை அறிவித்தார்.

கட்சியில் இருந்து தாம் ராஜினாமாச் செய்வதாக அறிவித்த அதேவேளை தாம் அடுத்த சில தினங்களில் ஜனாதிபதியைச் சந்தித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய விருப்பதாகவும் தெரிவித்தார். (அ-1)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் காவல் துறைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## தமிழ்த்தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேசுகின்றனர். இந்தச் சந்திப்புகளில் கூட்டமைப்புக் குழுவுடன் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியும் இணைந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. கூட்டமைப்பு எம்.பிக்கள் இம்முறை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் எவையும் இல்லை என்றும் கூறப்பட்டது.

சிவ்சங்கர் மேனனுடனான நேற்றைய சந்திப்பின்போது, வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து வவுனியாவில் தங்கியிருக்கும் அகதிகளின் அவலம் தொடர்பாக சிவ்சங்கர் மேனனுக்குக் கூட்டமைப்பு எம்.பிக்கள் விளக்கினர்.

அகதிகள் உடனடியாக மீள்குடியேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய தமிழ் எம்.பிக்கள், மீள் குடியேற்றத்துக்காக அரசினால் பஸில் ராஜபக்ஷ எம்.பி. தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் குழுவை தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும் சுட்டிக்காட்டினர்.

### வடக்கு, கிழக்குக்கான இராணுவ மயப்படுத்தும் முயற்சி

யுத்தம் முடிந்த பிறகும் மேலும் ஒரு லட்சம் பேரை இராணுவத்துக்குச் சேர்த்துக் கொள்ள அரசு முடிவெடுத்திருக்கின்றமை யானது, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளை முற்றுமுழுதாக இராணுவ மயப்படுத்தி தமிழ் மக்களின் இயல்பு வாழ்வைத் தொடர்ந்தும் சீரழிக்கும் ஏற்பாடு என்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியத் தரப்பிடம் தமது அதிருப்தியை வெளியிட்டனர். யாழ்ப்பாணம் மாதகலில் சமீபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ பௌத்த ஆலயம் ஒன்றுக்கான அடிக்கல்லை நாட்டியிருக்கின்றமையும் தமிழர் பகுதிகள் சிங்கள மயப்படுத்தப்படுகின்றமையைப் புலப்படுத்துகின்றன என்று சுட்டிக்காட்டிய தமிழ் எம்.பிக்கள் இதனை இந்தியா உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் 10 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையான பொது மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இந்தியத் தரப்பிடம் வலியுறுத்தப்பட்டது.

### எத்தகைய தீர்வு என்பதை வலியுறுத்த மாட்டோம்

இதேவேளை, தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பு முடிந்த கையோடு, இலங்கையிலிருந்து சென்றிருந்த பத்திரிகை ஆசிரியர்கள் சுமார் 15 பேரை சிவ்சங்கர் மேனன் சந்தித்தார். இலங்கையின் தற்போதைய மற்றும் எதிர்கால நிலைவரங்கள் தொடர்பான இந்தியப் பேரரசின் நிலைப்பாடுகளையும், கரிசனைகளையும் அவர் பத்திரிகை ஆசிரியர்களோடு பகிர்ந்து கொண்டார்.

"இலங்கைப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்த மாட்டோம். ஆனால், எல்லோரையும் திருப்திப்படுத்தக்கூடிய ஏற்பாடு ஒன்று தேவை என்பதே எமது கரிசனையாகும்." - என்று இந்தச் சந்திப்பின் போது சிவ்சங்கர் மேனன் குறிப்பிட்டார்.

"எல்லா மக்களையும் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வு ஒன்றின் மூலமே இலங்கையில் அமைதியும் பாதுகாப்பும் ஏற்படும். இலங்கையில் அமைதி ஏற்பட்டால்தான் இந்தியாவிலும் அமைதியும் பாதுகாப்பும் வலுவடையும். எல்லோரும் மகிழ்ச்சியாக வாழலாம். இதனாலேயே இந்த விடயத்தில் இந்தியா கரிசனை கொள்கிறது." - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 20 நாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

30 வருடங்களாக நாட்டைப் பிடித்து ஆட்டிய பயங்கரவாதத்தை நாம் இராணுவ ரீதியாகத் தோற்கடித்துவிட்டோம். இதன் மூலம் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டிய முதல்தர நாடாக இலங்கை உலக அரங்கில் ஜொலிக்கின்றது.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் எமது நடவடிக்கைக்கு 20 நாடுகள் உதவின. அந்நாடுகளுக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றிகள் தெரிவிக்கின்றேன் - என்றார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் உள்ள மக்களை நாம் நல்ல முறையில் கவனித்து வருகிறோம். அவர்களை மிக விரைவில் மீள்குடியமர்த்துவோம்.

ஐ.நா. செயலாளர் இலங்கை வந்த போது அவருக்கும் எமது ஜனாதிபதிக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது என்று ஐ.தே.க. எம்.பியான லக்ஷ்மன் செனவிரட்ன இங்கு கூறினார். அப்படி ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை என்று நான் பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல் இஸ்ரேலுடன் எமக்கு உறவில்லை என்றும் அந்நாடு எமது நாட்டுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் யோசனை கொண்டுவருவதற்குப் பின்னணியில் இருந்தது என்றும் செனிவிரட்ன மேலும் கூறியிருந்தார்.

இஸ்ரேல் எந்தவிதமான சர்வதேச கூட்டத்திலும் எமக்கு எதிராக யோசனைகளைக் கொண்டு வந்ததில்லை. அந்நாட்டுடன் நாம் நல்ல உறவை பேணி வருகிறோம்.

இஸ்ரேலின் தலைநகரில் எமது நாட்டுத் தூதரகம் அமைக்கப்பட்டுள்ளது. எமது தூதுவர் அந்நாட்டுடன் நல்ல உறவைப் பேணும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் - என்றார் அமைச்சர். (அ-சி)

படிவம் விற்பனையாகிறது
Sampath Bank
Vacancies in Jaffna
Peninsula & Mannar
முடிவுத்திகதி: 14.06.2009
G.C.E. O/L - 2009
விண்ணப்பப்படிவம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல,4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படை முகாமுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இந்த 511 ஆவது படையணி முகாம் அமைந்துள்ளது.

ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக சுமார் இரண்டு மணி நேரமாக பாரிய வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இதனால் இராணுவத் தளத்தை அண்டிய பகுதிகள் அதிர்ந்தன என்றும் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பல மணிநேரத்திற்குப் பின்னரே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (அ-சி)

## எம்மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இந்தப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது ஆனால் நிழல்கள் மாத்திரம் ஆவிகளாகத் திரிகின்றன. அவற்றையும் கூட நாம் முற்றாக ஒழித்துக்கட்டுவோம். நீறு பூத்த நெருப்பாக இருக்கும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டாவிட்டால் அது மீண்டும் பாரிய காட்டுத்தீயாக மாறிவிடும்.

முளையில் கிள்ளி வீசவேண்டிய பயங்கரவாதத்தை நாம் இதுவரைக்கும் விட்டுவைத்ததாலேயே இப்போது அதை நாம் கோடரியால் வெட்டி வீழ்த்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

போதைப் பொருள் வியாபாரிகள் போன்றோருக்கு இந்தப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டமை ஆழ்ந்த கவலையைத் கொடுத்துள்ளது. அவர்கள் இந்தப் பயங்கரவாதத்தின் மீதுதான் பிழைப்பு நடத்தினர். அவர்களுக்கு நாட்டைப் பற்றிக் கவலையில்லை. அவர்களுக்கு தேவை பணம் மட்டும்தான்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதை விரும்பாத சில சக்திகள் இலங்கை அரசு மீது யுத்தக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி இலங்கையை சர்வதேச பலிபீடத்தின் முன் நிறுத்த முயற்சிக்கின்றன. இதுபற்றியெல்லாம் கவலைப்படாது யார் என்ன சொன்னாலும் ஆங்காங்கே எஞ்சியுள்ள பயங்கரவாதத்தையும் ஒழித்துக்கட்டுவோம்.

எமது உள்நாட்டு விடயத்தில் தலையிட எவருக்கும் உரிமையில்லை. இதனால், பல நாடுகள் எமது பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைக்கு உதவின - என்றார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா. (அ-சி)

## அரச எம்.பிக்களும்....

(15 ஆம் பாக்கத்த தொடர்ச்சி)

அவரது இந்தச் செயற்பாட்டால் சக கூட்டமைப்பு எம்.பிக்கள் மாத்திரமன்றி அரச மற்றும் எதிரணி உறுப்பினர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

கிஷோர் அவசரகாலச்சட்டத்தை எதிர்க்காமல் இருந்தமையை அவதானித்த அரச எம்.பிக்களும் அமைச்சர்களும் அவரைப் புகழ்ந்து தள்ளினர். கிஷோர் எம்.பியின் பெயரைச் சொல்லி மேசையில் தட்டி ஆரவாரித்து அவருக்கு வாழ்த்துக் கூறினர்.

முடிவில் 95 மேலதிக வாக்குகளால் அவச ரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது. ஆதரவாக 102 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையில் கவனம் செலுத்த விரும்புவதாகவும் இதற்கு அரசின் தயவு தேவைப்படும் என்பதால் அரசுக்கு எதிராக வாக்களிக்க வில்லை என்றும் -

எந்தவிதமான அழுத்தம் காரணமாக இந்த முடிவை எடுக்கவில்லை என்றும் - கிஷோர் பி.பி.சிக்கு தெரிவித்தார்.

விற்பனையாகிறது
13/06/2009
சனிக்கிழமை
நடைபெறவுள்ள
கமநல திணைக்கள
அபிவிருத்தி
உத்தியோகத்தர்
போட்டிப் பரீட்சைக்கான
வழிகாட்டி - 2009
P.கமல்தாசன் விலை 100/=
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல,4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org